# அருவியூர் நகரத்தார் குரல்

திங்கள் இரண்டுக்கு ஒன்று

ஆண்டு 26 - 161

பிலவ - ஆவணி

கல்வி பண்பாடு வளர்ச்சி இதழ்

செப்டம்பர் 2022


## 42வது கல்விக்காவலர்



தெய்வத் திருவாளர்கள் :

**ம.பொ. மாணிக்கம் செட்டியார் – மா. வேலுமயிலி ஆச்சி**

சிறுகுடி - அரும்பாக்கிளையார்.

பெற்றோருக்கு பெருமை சேர்ப்பவர்கள்

தவப்புதல்வர்கள்:

உயர்திரு M. சுவாமிநாதன் - திரு M. கனகராஜ்,

தவப்புதல்வி: திருமதி S. அமுதா - M. சுப்பையா


வெளியீடு

அருவியூர் வடக்குவளவு நகரத்தார்

கல்வி வளர்ச்சிக் கழகம் (பதிவு)

பிரான்மலை



Guruji.S.RAJAKUMAR
Business Consultants
Devotional Advisor
+91 944 348 0007

#7, LIGHT HOUSE COMPLEX,
FOUR ROADS, SALEM - 636 009.
CELL : 98427 10545, 93677 10545

3A SANNITHANAM, P54 'VISAKA',
6TH AVENUE, ANNA NAGAR,
CHENNAI - 600 040.
Cell: 81444 10545

WOODLAND CIRCLE,
5, RAJA RAM MOHAN ROY ROAD,
RICHMOND CIRCLE,
BENGALURU - 560 025.
CELL : 90350 10545

MAHILVITHU MAHIL®
MAHA SANNITHANAM

gurusaranam5@gmail.com  www.mahilvithumahil.com  Google Play: Mahilvithu Mahil

---

RK.KANE MOZHI  Cell: 91591 10545

My DRESS CODE™
Just different. More unique..

SILK SAREES  FANCY SAREES  CHUDIDHAR  TOPS

mydresscodeslm@gmail.com  /mydresscodeslm

---

My DESIGN STUDIO™
boutique style stitching

"We undertaking All type of Stitching Work"

❖ Aari Work ❖ Designer Blouse ❖ Customized Stitching

#221, SURYA NIVASS, MAIN ROAD,
OPP. JAIN TEMPLE,
SHANKAR NAGAR, SALEM - 636 007.

Mob. : 98428 10545
76676 10545

உ
நமது சமூகத்தின் கல்வி வளர்ச்சியே எமது தலையாய குறிக்கோள்

உதவுவோம்! பண்படுத்துவோம்! பாராட்டுவோம்!

**பட்டம் பெற்றுத் தொழிலிற் சிறப்போம்!**

# அருவியூர் நகரத்தார் குரல்



**ஆண்டு 26**
**குரல் 161**

ஒருமைக்கண் தான்கற்ற கல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்பு உடைத்து - குறள் 398

**செப்டம்பர்-2022**
**சுபகிருது-**
**ஆவணி-புரட்டாசி**

**கழக நிர்வாகிகள்**

**தலைவர்**
செ. ஆசை அலங்காரம் - 96294 67287
**செயலாளர்**
மு. இராமலிங்கம் - 9943 01 7232
**பொருளாளர்**
சு. முத்து - 90430 10199

**நிர்வாகக் குழு**

**இணைத் தலைவர்கள்**
ஏ.பி. ஸேதுராமன் - 98422 89705
சொ. இராமனாதன் - 97155 100 0179
**துணைத் தலைவர்**
Ln. க. இளங்கோவன் - 94420 41340
**உறுப்பினர்கள்**
சொ. இளங்கோவன் - 94434 54173
ச. பழனியப்பன் - 90257 87637
சே. தவசீலன் - 98439 91517
ரா. வினோத்குமார் - 90038 00417

**உள் தணிக்கையாளர் :** R. வினோத்குமார்
Website Manager : S.S. Manian, DCE., Pudukkottai
website : www.avnsangams.co.in

**குரல் ஆண்டு சந்தா : ரூ.120/-**
**குரல் ஆயுள் சந்தா : ரூ.1800/-**

**குரல் நிறுவிய ஆசிரியர்**
திரு.சொ. வைத்திலிங்கம்
தொடக்கம் : 1997
**கௌரவ ஆசிரியர்**
திரு. M.S. முருகப்பன்
தலைவர் அ.வ.ந. பொதுநலச்சங்கம்

**குரல் பதிப்பாசிரியர்**
திரு செ. ஆசை அலங்காரம்
**ஆசிரியர் குழு**
திரு செ. ஆசை அலங்காரம்
Dr. சூரியகலா குமார்
V. கணேசன்
மற்றும் கழக நிர்வாகிகள்

கடிதம், செய்திகள், படைப்புகள் இவற்றை
அனுப்ப வேண்டிய முகவரி :
அருவியூர் நகரத்தார் குரல்,
அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம்,
3, முதல் குறுக்குத் தெரு,
அழகப்பா காம்ப்ளெக்ஸ் பின்புறம்,
பொன்னமராவதி,
புதுக்கோட்டை - 622 407.
avnkalvi@gmail.com
அலுவலக வாட்ஸ்அப் : 87783 55837



## தீபாவளி வாழ்த்து





துன்பங்கள் நீங்கி என்றும் இன்பங்கள் தொடர்ந்திட!
அன்பும் ஆரோக்கியமும் என்றென்றும் நிலைத்திட!
தீமை இருளகன்று தித்திக்கும் நினைவுகள் மலர்ந்திட!
நம் மனமெங்கும் மத்தாப்பாய் மகிழ்ச்சி பெருகிட!
சிறுமைகள் தீர்ந்து மனையெங்கும் மங்களம் தழைத்திட!
தித்திக்கும் நினைவுகளுடன் வீடெங்கும் மகிழ்ச்சி பொங்கிட!
அனைவருக்கும் தீபாவளி நல் வாழ்த்துகள்!

**24.10.2022**
**திங்கட்கிழமை**



**- அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழக மற்றும் குரல் நிர்வாகிகள்**

# பொருளடக்கம்


| வ. எண். | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | தலைவர் சிந்தனை | 3 |
| 2. | கல்வி வளர்ச்சிக் கழக அறிவிப்புகள் | 7 |
| 3. | 42-வது கல்விக்காவலர் | 10 |
| 4. | முகப் பொலிவுக்கு பேரிச்சை | 17 |
| 5. | அருவியூர் தந்தை பிறந்த நாள் வாழ்த்து | 18 |
| 6. | படித்ததில் பிடித்தது-1 | 19 |
| 7. | சப்தஸ்தான பெருவிழா | 25 |
| 8. | தீபாவளி வழிபாடுகள் | 26 |
| 9. | ஸ்ரீ மங்கைபாகர் தேனம்மை திருமண தகவல் | 27 |
| 10. | மலரட்டும் மனிதநேயம் | 28 |
| 11. | தாய்ப்பால் | 30 |
| 12. | கல்விக்காவலர்கள் | 34 |
| 13. | இளைஞர்களுக்கு கடமைகளும் உண்டு | 36 |
| 14. | புதிய கல்விக்காவலர்கள் | 39 |
| 15. | எது அறம்? எது சிறந்த அறம்? | 40 |
| 16. | கல்விக்காவலருக்கு பாராட்டு | 44 |
| 17. | வாசகர் குரல் | 46 |
| 18. | சிவபாதம் சேர்ந்தார் | 49 |
| 19. | அருவியூர் தந்தை நினைவு அஞ்சலி | 51 |
| 20. | மு. தேனிமலை நாகப்பன் அவர்களுக்கு புகழஞ்சலி | 52 |
| 21. | தாய்க்கு நிகரானவள் தாரம் | 56 |
| 22. | இ சேவை மையம் தொடங்குவது எப்படி? | 58 |
| 23. | வேளாண் வேதியியல் துறையில் நம்மவர் | 62 |
| 24. | திருமூலர் திருமந்திரம் | 64 |

தலைவர் சிந்தனை

**வணிகம் செய்வோம்!**
**வளம் பெறுவோம்!**

**செ. ஆசை அலங்காரம்** B.Sc.,
தலைவர்

**மக்கள் சேவையே! மகேசன் சேவை!**



**நகரத்தார் பெருமக்கள் அனைவருக்கும் என் அன்பான வணக்கம்!**

நம் முன்னோர்கள் ஆதி காலத்தில் நாகநாட்டில் வாழ்ந்ததாகவும், பின்னர் தொண்டை நாட்டில் காஞ்சிபுரத்திலும், சோழவள நாட்டின் பூம்புகாரிலும், பாண்டி நாட்டின் அருவியூர் பட்டணத்திலும் ஒன்றின் பின் ஒன்றாக ஒவ்வொரு நாடாக காலச்சக்கரத்தின் சுழற்சிக்கேற்ப இடம் பெயர்ந்து (migration) வாழ்ந்து வந்துள்ளார்கள். நாடு விட்டு நாடு இடம் பெயர்ந்து வாழ்ந்து வந்தாலும், தங்களின் இயல்புகளை (குணாதிசயங்கள், பண்புகள்) மாற்றிக் கொண்டதே கிடையாது. எந்த நாட்டிற்கு இடம் பெயர்ந்தாலும், தாங்கள் பாரம்பரியமாக செய்து வந்த தொழிலான வர்த்தகத்தை மாற்றாமல் வணிகம் செய்தே வாழ்ந்து வந்துள்ளார்கள். அவர்கள் வாழ்ந்த எல்லா நாடுகளிலும் தன வாணிக வைசியர்கள் என்றே சிறப்பான அடைமொழியோடே அழைக்கப்பட்டு வந்துள்ளோம். தாங்கள் செய்து வந்த வணிகத்தின் மூலம் ஏற்றம் பெற்று, மக்களாலும், மன்னராலும் மதிக்கப்பட்டே வாழ்ந்து வந்துள்ளோம். நம் முன்னோர்கள் உயர்ந்த நிலையில் பெரும் கௌரத்தோடும், சகல வசதிகளோடும் சிறப்பாக வாழ்ந்த காலங்களிலும், மொகலாயர்களின் படையெடுப்பின்போது தாங்கள் ஈட்டிய செல்வங்கள் அனைத்தும் சூறையாடி, கொள்ளையடிக்கப்பட்டு எல்லாவற்றையும் இழந்து மலைமறைவு பகுதிகளில் உயிருக்குப் பயந்து வாழ்க்கையில் அடித்தட்டு மக்களைப் போன்று வாழ்ந்த காலத்திலும் வறுமையிலும் செம்மை என்கிற முதுமொழிக்கேற்ப தொழில் தர்மத்தைக் கடைப்பிடித்து உண்மை, ஒழுக்கம், நேர்மை போன்ற நற்பண்புகளோடு தெய்வ நீதிக்குப் பயந்து வணிகத்தைச் செய்து வாழ்ந்து வந்துள்ளார்கள். தங்கள் வாழ்க்கையின் எல்லா காலகட்டத்திலும் எளிமையாகவும், சிக்கனமாகவும்,

ஆடம்பரமின்றி வாழ்ந்து வந்துள்ளார்கள். இன்றும் நம் மக்கள் அந்தப் பண்புகளோடே வாழ்ந்து வருகிறார்கள். சில சமயங்களில், சில இடங்களில் மட்டுமே இதற்கு மாறுபட்டு நம்மவர்களில் சிலர் நடப்பதைக் காண முடிகிறது. சில நிறுவனங்கள் ஏன் அரசாங்கங்கள் கூட நிதி நெருக்கடிகள் ஏற்படும்பொது மட்டுமே சிக்கனத்தைக் கடைப்பிடிப்பதைப் பற்றி சிந்திப்பார்கள். “சிக்கனம் இக்கணம் தேவை” என பதாகைகள் (banner) வைப்பார்கள். ஆனால் எந்தக் காலத்திலும் நம்மவர்கள் சிக்கனத்தை கடைப்பிடிக்காமல் இருந்ததில்லை. வாழ்க்கையை எப்படி வாழ வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாய் வாழ்ந்தவர்கள்; வாழ்ந்து வருபவர்கள் நம்மவர்கள். வாழ்க்கையை எப்படி வாழ வேண்டும் என்பதற்கு உலகிற்கு இலக்கணம் வகுத்துக் கொடுத்த சமுதாயம் நம் சமுதாயமாகும் என்பதை நெஞ்சை நிமிர்த்தி பெருமையோடு சொல்லலாம்.

பிரான்மலையை தலைமையிடமாகக் கொண்டு பொதுநலச்சங்கம் ஆரம்பிக்கப்பட்ட பின் பல ஊர்களிலும் சங்கங்கள் ஆரம்பிக்கப்பட்டன. அதற்கு முன்பாகவே சில ஊர்களில் சங்கங்களும், சில ஊர்களில் நகரம் என்கிற பெயரிலும் நம் நகரத்தார்களின் செயல்பாடுகள் இருந்து வந்துள்ளது. இந்த அமைப்புகள் எல்லாம் உறுப்பினர்களிடம் சந்தா வசூல், சிறு சேமிப்புத் திட்டங்கள், நன்கொடை, திருமண கட்டணம் போன்றவைகள் மற்றும் பாத்திரங்கள் வாங்கி வாடகைக்கு விட்டும் நிதி நிலையை சிறுக சிறுகப் பெருக்கி, அந்தப் பணத்தைக் கொண்டு இடத்தை சங்கத்திற்காக வாங்கி அதில் வணிகவளாக கட்டிடங்கள், மண்டபங்கள் போன்றவைகளைக் கட்டி வாடகைக்கு விட்டு தங்கள் சங்கத்தின் வருமானத்தை வளர்த்து வருகிறார்கள். மற்றும் சில சங்கங்களில் வசதி வாய்ப்புள்ள சில பேர்கள் சேர்ந்து தங்களின் சங்கத்திற்காக இடத்தை வாங்கியுள்ளார்கள்.

இது போன்று நிலையான சொத்துக்கள் உருவாக்கப்படும்போது தங்களிடம் போதிய நிதி இல்லையென்றால் சேமிப்புத் திட்டம் தொடங்கி அதன் மூலம் சங்கத்திற்காக இடத்தை வாங்கியுள்ளார்கள். கிடைக்கும் நிதியைக் கொண்டு நிதிப் பற்றாக்குறையை சரி செய்வார்கள்.

அவ்வாறும் நிதிப் பற்றாக்குறையை சரி செய்ய முடியாவிட்டால் தங்கள் உறுப்பினர்கள் மற்றும் நம் சமுதாய பெரியவர்கள் ஆகியோர்களிடம் குறைந்த வட்டிக்கு கடன் வாங்கி அந்த வேலையை முடிப்பார்கள். ஆனால் இவ்வாறாக கஷ்டப்பட்டு அந்த வேலை முடிக்கப்பட்ட பின் அதனை பராமரிப்பதில் காலப்போக்கில் சிறு சிறு பிரச்சனைகள் உண்டாகி, அவைகளை அப்போதே சரி செய்யாமல் விட்டுவிடுவதால் அது நாளடைவில் பூதாகரமாக உருவெடுத்து சங்கத்தில் பெரிய கருத்து வேறுபாடு உண்டாக்கி, சங்கத்தையே பிளவுபடுத்தும் நிலைக்கு கொண்டு சென்று விடுகிறது. அச்சங்கங்களின் உறுப்பினர்கள் இக்குறைகளைச் சொல்லி பொருமிக்கொண்டும், குமுறிக்கொண்டும் இருப்பதைப் பார்க்கிறோம். அதே போன்று மேற்கண்டபடி அமைப்புகள் உருவாக்க, நம் சமுதாயப் பெரியவர்கள் பலரிடம் மிகக் குறைந்த வட்டிக்கு பெற்ற கடன்களையும் பல ஆண்டுகள் கடந்தும் அச்சங்கங்களால் இதுவரை திருப்பிச் செலுத்தப்படாமலே உள்ளது. அச்சங்கம் வளரட்டும் என நல்ல நோக்கத்தில் வழங்கப்பட்டு, அசலும் திரும்பக் கிடைக்காமல், வட்டியும் கிடைக்காமல் மிகுந்த மன உலைச்சலுக்கு, குறைந்த வட்டிக்கு கடன் கொடுத்த நல்ல உள்ளம் கொண்டவர்கள் ஆளாகியுள்ளார்கள். இது இவ்வாறக இருக்க, சில சங்கங்களில் சங்கத்திற்கென பொது நோக்கத்தோடு வாங்கப்பட்ட சொத்துக்கள் சில தனிநபர்களின் பெயர்களில் கிரயம் பதியப்பட்டுள்ளது. இவைகள் சங்க நிர்வாகத்தின் கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவரப்படாமல் உள்ளதும், சங்க உறுப்பினர்களுக்கு வேதனையை அளித்து வருகிறது. இவைகளை சரிசெய்ய வேண்டிய பொறுப்பும், கடமையும் நம்முடைய தாய் சங்கமான பொதுநலச்சங்கத்தின் தலைவர் அவர்களுக்கும் அதன் நிர்வாகிகளுக்கும் உண்டு என்பதை தெரிவித்துக் கொள்ள கடமைப்பட்டிருக்கிறேன். ஏனெனில் ஒரு தாயானவள் தன் பிள்ளைகளையெல்லாம் அறிவில் ஒழுக்கத்தில் கண்ணியத்தில், நாணயத்தில், நேர்மையில், உண்மையில், சத்தியத்தில் இன்னும் பல நற்பண்புகளில் சிறந்தவர்களாகவே இருக்க வேண்டும் என்ற எண்ணத்தோடு கண்ணும் கருத்துமாக பார்த்து பார்த்து வளர்ப்பாள். எந்தக் குழந்தையையும் சோடை போக விட

மாட்டாள். அதே போன்ற பொறுப்பும், கடமையும் நம் தாய் சங்கமான பொதுநலச்சங்கத்திற்கும் அதன் தலைவர் உள்ளிட்ட நிர்வாகிகளுக்கும் உண்டு. தற்போது தான் நம் சமுதாயம் முன்னேற்றப் பாதையை நோக்கி பயணிக்கத் தொடங்கி உள்ளது. தொடக்கம் நல்ல தொடக்கமாக அமைய வேண்டும். starting is to be a good starting ஆரம்பத்திலேயே நம் முன்னேற்றப் பாதையில் தடங்கலோ சுணக்கமோ ஏற்பட்டுவிடக்கூடாது. அது நம் வளர்ச்சியைப் பாதித்து விடும் என்கிற பயத்தின் விளைவு தான் இக்கட்டுரை என்பதைத் தெரிவித்துக் கொள்கின்றேன். நமது சமுதாயத்தில் பல ஊர்களில் உள்ள சங்கங்களின் செயல்பாடுகளில் உள்ள நிறைகளைப் பாராட்டி அவர்களை உற்சாகப்படுத்த வேண்டும். குறைகளைக் களைந்து செம்மைப்படுத்திட வேண்டும். அனைவரும் இக்கருத்தினை தங்களின் மேலான பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ள வேண்டுகிறேன்.

உ
சிவமயம்
அருவியூர் வடக்குவளவு நகரத்தார் குரல் சிறக்க வாழ்த்துக்கள்!

உஷா ஜுவல்லர்ஸ் பைனான்ஸ் டெக்ஸ்

77-78, மீனாட்சி டவர்ஸ், P.T.ராஜன் ரோடு,
பீபீ குளம், மதுரை-2.

:7373073738

# கல்வி வளர்ச்சிக் கழக அறிவிப்புகள்

மு. இராமலிங்கம், செயலாளர், அலுவலகம் - 87783 55837.


மு. இராமலிங்கம்,
செயலாளர்.

1. 2022-23-ம் கல்வி ஆண்டிற்கு கல்வி உதவித் தொகை கோரும் மாணவ, மாணவிகள் விண்ணப்பங்களை கல்வி வளர்ச்சிக் கழக அலுவலகத்திடமிருந்து பெற்றுக் கொள்ள கேட்டுக் கொள்கின்றோம். பூர்த்தி செய்த விண்ணப்பங்களை கல்வி வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் சமர்ப்பிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

தொடர்புக்கு : வாட்ஸ்அப் எண். 9943017232.

| வரிசை எண். | கடன் பெற்றவர் பெயர் | ஊர் | பெற்ற கடன் தொகை | கடன் முழுவதும் செலுத்திய தொகை |
|---|---|---|---|---|
| 1. | செ. ஆசை அலங்காரம் | கோவை | 30,000 | 30,000 |
| 2. | ப. சந்தோஷ்குமார் | திண்டுக்கல் | 40,000 | 40,000 |
| 3. | ரா. பத்மபிரியா | திண்டுக்கல் | 30,000 | 30,000 |
| 4. | மு. சௌந்தர்யா | தஞ்சாவூர் | 20,000 | 20,000 |
| 5. | ர. நாகவர்ஷினி | சென்னை | 10,000 | 10,000 |
| 6. | ச. மணிவாசகம் | தஞ்சாவூர் | 10,000 | 10,000 |
| 7. | ரா. ஹரிஸ் | தஞ்சாவூர் | 30,000 | 30,000 |
| 8. | சே. கார்த்திக் | சிங்கம்புணரி | 20,000 | 20,000 |
| 9. | B. சுந்தர் | சோமனூர் | 20,000 | 20,000 |
| 10. | க. அருண்நந்தகுமார் | திண்டுக்கல் | 10,000 | 10,000 |
| 11. | வி. தீபக் | கொட்டாம்பட்டி | 26,000 | 26,000 |

2020-2021 வரை கல்வி வளர்ச்சிக் கழகம் மூலம் 52 மாணவர்களுக்கு பட்ட மேற்படிப்பு படிப்பதற்கு கடன் வழங்கப் பட்டுள்ளது. அதில் மேற்கண்ட 9 மாணவர்கள் தங்களின் படிப்பு முடிந்து பெற்ற கடன்தொகை முழுவதும் செலுத்தி தாய் தந்தையருக்கும் பெருமை சேர்த்துள்ளனர். இதுபோல் மற்ற 44 மாணவர்கள் தாங்கள் பெற்ற கடனை சிறிது சிறிதாக செலுத்தி கடன் முழுவதையும் தீர்க்குமாறும் பிற படிக்கின்ற மாணவர்களுக்கு உதவி செய்யுமாறும் அன்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறது. பணம் செலுத்தியவுடன் தகவல் தெரிவிக்க வேண்டிய வாட்ஸ்அப் எண்.99430 17232, மு. இராமலிங்கம், செயலாளர்.

**வங்கி கணக்கு விபரம்**

| | | |
|---|---|---|
| கணக்கின் பெயர் | : | அருவியூர் வடக்குவளவு நகரத்தார் கல்வி வளர்ச்சிக் கழகம் (AVN KALVI VALARCHI KAZHAGAM) |
| வங்கி/கிளையின் பெயர் | : | இந்தியன் பேங்க், புதுப்பட்டி |
| கணக்கு எண் | : | 493740102 |
| IFSC | : | IDIB000P052 |

## 3) 10, 12, CBSE 10, 12,

கல்வி வளர்ச்சிக் கழகத்தால் வழங்கப்படும் ஊக்கப்பரிசு, பதக்கங்கள், புத்தகப் பரிசு பெற 10, 12, வகுப்பு CBSE 10, 12, மதிப்பெண் சான்றிதழ் நகல்களை அனுப்பி வைக்க வேண்டும். அவ்வாறு அனுப்பி வைக்கும்போது கம்ப்யூட்டர் பிரிண்ட் அவுட் அல்லது தற்காலிக சான்றிதழ்களை அனுப்ப வேண்டாம்.

மேற்கண்ட மதிப்பெண் பட்டியலை ஜெரக்ஸ் நகல் எடுத்து அதன் பின்புறம், பெற்றோர் பெயர், முகவரி (பின்கோடுடன்) செல் நம்பர், இரண்டு பாஸ்போர்ட் சைஸ் போட்டோ, குடிப்பட்டம்-பூர்வீகம் ஆகிய விபரங்களைத் தெளிவாக எழுதி கல்வி வளர்ச்சிக் கழகத்திற்கு அனுப்பி வைக்கவும்.

M.B.B.S., B.E. இளங்கலை, முதுகலை பட்டப்படிப்புகளில் பருவத் தேர்வுகளில் எவ்வித arrear இன்றி 80 சதவீதத்திற்கு மேல் மதிப்பெண் பெற்று தேர்ச்சி பெற்றவர்கள் தங்கள் சான்றிதழ் நகல்களை அனுப்பி வைக்கவும்.

மேற்குறிப்பிட்டுள்ளபடி நகல் சான்றிதழ்களை 30.9.2022-க்குள் இவ்வலுவலகத்திற்கு அனுப்பி வைக்க கேட்டுக்கொள்கின்றோம்.

**குறிப்பு :**



சிவகங்கை மாவட்டம் - சிங்கம்புணரி வட்டம் - S. புதூர் ஒன்றியம் - வா. புதூர் கிராமத்தில் நம் சமூகத்தின் அடையாளமாக வாழ்ந்து நாளது தேதி வரை அனைவரின் உள்ளத்திலும் நீங்கா இடம் பெற்ற மாமனிதர் தெய்வத்திரு மு. அலங்காரம் செட்டியாரின் மகள் திருமதி கிரு. செண்பகம்

ஆச்சியின் மகன் திரு. கணேசன் என்பாரின் மகன் க. அருண்நந்தகுமார் C.A. பயில்வதற்காக 2017-2018-ல் கல்விக் கடனாக ரூ.10,000/- பெற்றுள்ளார். தற்போது அவர் பணியில் சேர்ந்து கடன்பெற்ற தொகை ரூ.10,000யும் செலுத்தி விட்டார். அதோடு இல்லாமல் 2017-18-ல் இலவச உதவித்தொகையாக ரூ.5000-மும், முதல் பட்டதாரிக்காக பெற்ற தொகை ரூ.1000-மும் சேர்த்து நம் சமூக மாணவர்களின் எதிர்கால கல்வி நலன் கருதி ஆக மொத்தம் ரூ.16,000 யும் ஒரே தவணையில் செலுத்தி உதவிக்கரம் நீட்டி பெற்றோருக்கு பெருமை சேர்த்துள்ளார். இச் செயல் ஒரு முன்னுதாரணமாக செய்துள்ளார்கள். இப்பெருமை எல்லாம் மாமனிதர் தெய்வத்திரு மு. அலங்காரம் செட்டியார் அவர்களையே சேரும். அன்னாரின் குடும்பம் மென்மேலும் வளர வாழ்த்துக்கள். நன்றியையும், பாராட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இவண்**
**கல்வி வளர்ச்சிக் கழக நிர்வாகிகள்**

---


உ
சிவமயம்

வானிற்பொலி வெய்தும்மழை மேகங்கிழித் தோடிக்
கூனற்பிறை சேருங்குளிர் சாரற்கொடுங் குன்றம்
ஆனிற்பொலி வைந்துமமர்ந் தாடியுல கேத்தத்
தேனிற்பொலி மொழியாளொடு மேயான்திரு நகரே

திருஞான சம்பந்தர் அருளிய
திருக்கொடுங்குன்ற பதிகம்

குரல் சிறக்க வாழ்த்துக்கள்

**அன்புமணி மெடிக்கல்**

**சின்னக்கடை வீதி, 260, அண்ணாசாலை,**
**பொன்.புதுப்பட்டி, பொன்னமராவதி.**
**போன் : 04333 260285, செல் : 94423 58165**

# 42 வது கல்விக்காவலர்



இந்த இதழின் அட்டைப் படத்தை அலங்கரிப்பவர்கள் தெய்வத்திருவாளர்கள் ம.பொ. மாணிக்கம் செட்டியார் – வேலுமயிலி ஆச்சி ஆகியோர்கள். இவர்களின் பூர்வீகம் 14 ஊர்களின் தாய் ஊரான சிறுகுடியாகும். குடிப்பட்டம் அரும்பாக்கிளையார்.

இவர்களை கல்விக் காவலராக்கி பெருமை சேர்ப்பவர்கள் இவர்களின் தவப் புதல்வர்கள் உயர்திரு M. சுவாமிநாதன், திரு M. கனகராஜ், திருமதி S. அமுதா ஆகியோர் ஆவார்கள். நமது 42-வது கல்விக்காவலர் தெய்வத்திரு ம.பொ. மாணிக்கம் செட்டியார் அவர்கள் தனக்கு சூட்டப்பட்ட பெயருக்கேற்ப பெருமைப்படும்படி வாழ்ந்தார். ஏழை எளிய மக்களுக்கு அவர்களின் தேவையை அறிந்து, எந்தவிதமான எதிர்பார்ப்புமின்றி, தன்னலமற்ற சேவை செய்யும் கருணை உள்ளம் கொண்ட மனிதநேயப் பண்பாளர். ஊருக்கு உழைக்கும் இவரை பெறுதற்கரிய மாணிக்கமாகவே மக்கள் மதித்துப் போற்றிப் பாராட்டி மகிழ்ந்தார்கள். இறைவன் எப்போதும் நல்லவர்களை தன்னருகே வைத்துக் கொள்ளவே விரும்புவான் என்பதை மெய்ப்பிக்கும் வகையில் அவரும் தன் இளம் (35) வயதில் இறைவனின் நிழலில் இளைப்பாறச் சென்று விட்டார்கள்.

திருவாளர்கள் சுவாமிநாதன், கனகராஜ், அமுதா இவர்களின் தாயார் தெய்வத்திரு வேலுமயிலி ஆச்சி அவர்கள் தன் இளம் வயதில் தம் கணவரை இழந்தவர். மனதில் சோகமும் வேதனைகளும், வருத்தமும் நிறைத்திருந்தாலும் அவைகளை எல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு, பிள்ளைக்களுக்காக தியாக வாழ்க்கை வாழ்ந்த தெய்வத்தாய். அந்தத் தாயின் அன்பிற்கும்,

பாசத்திற்கும் ஈடு இணையில்லை. நற்பண்புகளையும், ஒழுக்கத்தையும், இரக்கத்தையும், அன்பையும், வீரத்தையும், விவேகத்தையும் இன்னும் பல உயரிய பண்புகளையும் தன் மக்களுக்கு ஊட்டி, ஊட்டி வளர்த்தார். தன் பிள்ளைகளை எந்த அளவுக்கு நேசித்தாரோ அதே அளவிற்கு இம்மியளவும் குறையாமல் தன் உறவுகளையும் நேசித்தவர். தந்தை மகற்காட்டும் நன்றி அவர்கள் சான்றோர்களின் சபையில் முந்தியிருக்க செய்வதாகும். ஒரு தந்தை செய்ய வேண்டிய அனைத்து கடமைகளையும் ஒரு தந்தையைப் போல செயல்பட்டு தன் பிள்ளைகளை ஊரார் போற்றும் வண்ணம் உத்தமர்களாக வளர்த்தெடுத்த பெருமைக்குரிய தாய் தன்னுடைய 77ஆம் வயதில் தன் கணவர் வாழும் இறை உலகுக்குச் சென்று சாந்தியடைந்து விட்டார்.

திருவாளர்கள் சுவாமிநாதன், கனகராஜ், அமுதா இவர்களின் தந்தை வழி தாத்தா தெய்வத்திரு பொன்னழகன் செட்டியார் அவர்கள் ஒரு நேர்மையாளர். உயர்ந்த ஒழுக்க சீலர். பல நற்பண்புகளுக்கு சொந்தக்காரர். வேளாண்மையையும், வேளாண்மை செய்யும் விவசாயிகளுக்கு கொடுக்கல் வாங்கல் என்று சொல்லப்படும் லேவாதேவி தொழில்களையும் செய்து வந்தார். தான் செய்து வந்த வட்டித் தொழிலில் மிகுந்த நேர்மையைக் கடைப்பிடித்து வந்தார்கள். குறைந்த வட்டிக்கே கடன் கொடுப்பது இவரின் நல்ல பழக்கமாகும். வசூல் செய்வதிலும் கடுமை இருக்காது; அதில் கருணையும், வாஞ்சையும் இருக்கும். அவரிடம் கடன்பெற்ற வேளாண் பெருமக்கள் பலரின் வாழ்க்கைத் தரம் உயர்ந்து நல்லநிலையில் உள்ளனர். அதனால் அவரை வேளாண் பெருமக்கள் பொன்மனச் செம்மல் பொன்னழகன் செட்டியார் என அன்போடு அழைப்பார்கள்.

தெய்வத்திரு பி.ம.வே. சோமசுந்தரம் செட்டியார் இவர்களின் தாய்வழித் தாத்தா ஆவார். இவர் ஏட்டுப்பள்ளியில் ஆரம்பக்கல்வி பயின்றவர். இவர் பட்டப்படிப்பு படித்தவரில்லை. தமிழ் இலக்கிய நூல்களையும், புராணங்களையும், ஜோதிட நூல்களையும் குருநாதர் துணையின்றி அனைத்தையும் கற்றுத் தேர்ந்தவர். பன்முகத் தன்மை கொண்டவர். எந்த இடத்திலும்,

எந்த நேரத்திலும், எந்தத் தலைப்பிலும் ஜோதிடம், இலக்கியம், புராணம் என அனைத்திலும் இலக்கியச் சுவையோடு, மக்களைக் கவரும் வகையில் திறம்படப் பேசும் சொல்லாற்றல் மிக்க பேச்சாளர். உயர்நீதிமன்ற நீதிபதிகள், I.A.S., I.P.S., அரசு அதிகாரிகள் இவரை அழைத்துப் பேச வைத்து, அதனைக் கேட்டு மகிழ்ந்து, தேனுண்ட வண்டுகள் போல் மயங்கி இவருடன் நட்புடன் பழகி வந்தார்கள்.

## திரு M. சுவாமிநாதன் :

இவர் குடும்பத்தின் மூத்த மகன். பி.காம். பட்டதாரி. தற்போது கோவையில் மருந்து வணிகமும், நிதி நிறுவனமும் நடத்தி வருகிறார். சிறுகுடி அ.வ.ந. சங்கத்தின் திருமண மண்டபத்தின் இயக்குநர், சேமிப்புத் திட்ட பொறுப்பாளர், ஆலோசகர் போன்ற பல பொறுப்புகளை வகித்து, சங்கத்தின் மேம்பாட்டிற்கு சிறப்பாக உழைத்தவர். அதன்பின் தொழில் நிமித்தம் கோவைக்கு இடம் பெயர்ந்தார். கோவை அ.வ.ந. சங்கத்தின் பொருளாளராக பலமுறை தொடர்ந்து ஒருமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டார் என்பது அவரின் நற்பண்பிற்கும், நம்பிக்கைக்கும், திறமைக்கும், நிர்வாகத் திறமைக்கும் எடுத்துக் காட்டாகும். தன்னைச் சார்ந்தவர்களுக்கும் நல்வழி காட்டும் நற்பண்பாளர்.

இல்லற வாழ்வை இவரோடு இணைந்து நடத்தும் திருமதி பேபி ராணி ஆச்சி அவர்கள் இவரின் தாய்மாமன் மகளாவார். கூட்டுக்குடும்பத்தை சிறப்பாகவும், திறம்படவும் நடத்திக் காட்டிய குணவதியாவார். இவர்களின் இல்லறத்தில் விளைந்த நன்முத்துக்கள் இரண்டு 1) திரு M. வினோத் குமார் M.B.A. 2) திருமதி A. சுகன்யா B.E., இருவருக்கும் திருமணமாகி ஊர் மெச்சும் வகையில் வாழ்ந்து வருகிறார்கள். விநோத்குமாரின் துணைவியார் திருமதி செண்பகப்பிரியா B.C.A., அனைவரிடமும் அன்பாகவும், பிரியமாகவும் நடந்து கொள்பவர். அதனால் இவரை பிரியா என்றே அனைவரும் அழைப்பார்கள். சித்தார்த், மீராஸ்ரீ என்கிற இரு நன் முத்துக்கள் இவர்களின் குழந்தைகள். சுகன்யா தன் அத்தை அமுதா அவர்களின் மகன் திரு அருண் அவர்களை மணந்து சென்னையில் வாழ்ந்து வருகிறார்.

## திரு M. கனகராஜ் :

இவர் குடும்பத்தின் இளையமகன், படிக்காத மேதை, பட்டறிவு என்னும் அனுபவ அறிவு நிரம்பப் பெற்றவர். எதையும் சாதிக்கும் வல்லமையும், மன உறுதி கொண்டவர். எத்தகைய இன்னல்கள் வந்த போதிலும் எதையும் கண்டு கலங்காத மன உறுதி படைத்தவர். எப்பொழுதும் இமயமாய் நிமிர்ந்து நிற்கும் மனவலிமை கொண்டவர். கனகராஜ் என்றால் உழைப்பு, உழைப்பு என்றால் கனகராஜ் என உழைப்பிற்கு எடுத்துக்காட்டாய் வாழ்பவர். சுறுசுறுப்பில் எறும்பையும் மிஞ்சக் கூடியவர். தான் கொண்ட கொள்கையில் உறுதியானவர்.

இவருடைய இல்லாள் திருமதி இளவரசி D.Pharm. இல்லறத்தின் பண்புகள் அனைத்தையும் கொண்டவர். இல்லறத்தை நல்லறமாக்கி இணை பிரியாது, மனம் ஒத்து வாழும் நல்லாள். இவர்களின் தாம்பத்திய வாழ்க்கையில் ஆஸ்திக்கு பொன்மாணிக்கம் என்கிற மகனும், பாசத்தோடு பரிவும் அன்பும் பாராட்ட சூர்யா B.E., சுவாதி என்கிற இரு பெண்மக்களும் உள்ளனர். இதில் பொன்மாணிக்கம் கடைக்குட்டி. B.Com.(C.A.) படித்துக் கொண்டிருக்கிறார். சுவாதி MSW Master of Social Work முதுகலைப் பட்டம் பெற்றவர். வயதில் சிறியவர். அறிவில் ஆற்றலில் பெரியவர். கருணை உள்ளம் படைத்தவர். சேவை மனப்பான்மை கொண்டவர். மனிதர்களின் மனநிலை அறியும் ஆற்றலும், மதிநுட்பமும் கொண்டவர். இவரின் திறமைகளை நன்கறிந்த Covai mind care Counselling Centre இவரை தங்கள் மருத்துவமனையில் வேலைக்கு அமர்த்திக் கொண்டது. மனநலம் பாதிக்கப்பட்டவர்கள், பிரிந்து வாழும் தம்பதியர்கள் ஆகியோர்களுக்கு counselling கொடுத்து அவர்களின் மனநலத்தை பேணுவதில் வல்லமை படைத்தவர். மனநலமே உடல்நலம் என்பது இவரின் கோட்பாடாகும். உயர்ந்த இலட்சியத்தை நோக்கிப் பயணிக்கும் ( Indian Civil Service, TNPSC I Group) இவரின் லட்சிய பயணம் உறுதியாக வெற்றிபெறும்.

சூர்யா இவர்களின் மூத்த மகள் B.E. பட்டதாரி, புழுதிபட்டி திரு M. சோலைராஜன் என்பவரை திருமணம் செய்து கொண்டார். இவரும் ஒரு B.E. பட்டதாரி. மரங்கள் நிறைந்த பகுதியை சோலை என்போம். அடர்த்தியான மரம், செடி, கொடிகள் நிறைந்த பகுதி

என்று கருதுவதுதான் உலக இயல்பு. அறிவார்ந்த சமுதாயத்தில் கற்பனைச் சோலை, கவிதைச் சோலை, புத்தகச் சோலை என்றும் இன்னும் பலவாறாகவும் சோலையை வர்ணிப்பார்கள். நம் சோலைராஜனும் மேற்கண்ட பண்புகள் அனைத்தும் கொண்டவர். இப்பண்புகளுக்கெல்லாம் தலைவனாக அரசனாக விளங்குபவர். அதனால் தான் இவருக்கு சோலைராஜன் என்னும் பெயர் சூட்டப்பட்டிருக்க வேண்டும். அல்லது தன் பெற்றோர்கள் சூட்டிய பெயருக்கு பொருந்தும் வகையில் வாழ்க்கை பயணத்தை அமைத்துக் கொண்டாரா என்பதற்கு அவரே விளக்கமளிக்க வேண்டும். இவர் தற்சமயம் அமெரிக்காவில் இன்போசிஸ் என்கிற நிறுவனத்தில் பணியாற்றுகிறார். இவரின் துணைவியார் திருமதி சூர்யா அவர்களும் இந்த கம்பெனியில் (work at home) பணிபுரிகிறார். இவர்களுக்கு ஆதிரா என்கிற பெண் குழந்தை உள்ளது. கருத்தோடும், அழகாகவும் பேசும் இம்மழலையை பாப்பு என அனைவரும் அன்போடு அழைப்பார்கள்.

## திருமதி அமுதா சுப்பையா:

இவர்கள் வீட்டில் இவர் ஒரே பெண் குழந்தை என்பதால் செல்லப்பிள்ளையாக வளர்க்கப்பட்டார். இவரின் கணவர் திரு சுப்பையா அவர்கள் சென்னையில் மருந்து வணிகமும், ஆயத்த ஆடை (Readymade garments) விற்பனை செய்யும் தொழிலையும் தன் சகோதரர்கள் திரு கணேசன், திரு தனசேகர் ஆகியோருடன் இணைந்து செய்து வருகிறார். இவரும் இவரின் சகோதரர்களும் உழைப்பால் உயர்ந்தவர்கள். இந்திய மொழிகள் பலவற்றில் சரளமாக பேசும் ஆற்றல் பெற்றவர். இது இவர்களின் தொழில் வளர்ச்சிக்கு உதவியாக இருந்து வருகிறது. வாழ்க்கையின் ஒவ்வொரு படியையும் தங்களின் முயற்சியாலும், கடினமான உழைப்பாலும் கடந்து வந்து இன்று சிகரத்தை தொட்டுவிட்ட சிறப்பிற்குரியவர்கள். இன்று வாழ்க்கையில் உயர்ந்த நிலைக்கு வந்து விட்டாலும் பழசை மறக்காத பண்பாளர். சென்னை சங்க செய்தி தொடர்பாளர். பொதுநலச் சங்க துணைச் செயலாளர் என பல பொறுப்புகள் வகித்து சமுதாயத்திற்கு சேவையாற்றியவர்.

**தெய்வத்தால் ஆகாது எனினும் முயற்சி தன்**
**மெய்வருத்தக் கூலி தரும்.**

என்கிற வள்ளுவரின் வாக்கிற்கு இலக்கணமாய் வாழ்ந்து கொண்டிருப்பவர்கள். இவரின் பூர்வீகம் கொட்டாம்பட்டி. இவரின் குடிப்பட்டம் வரதலூருடையார். கடுஞ்சொல் பேசாதவர். இன்முகம், இன்சொல்லும் இவர்களின் இயல்பான குணம். வஞ்சகம், சூது அறியாதவர். யதார்த்த வாதி. அனைவரையும் அனுசரித்தும், அரவணைத்தும் செல்லும் பண்பு மற்றும் உறவுகளைப் பேணும் உயர்ந்த பண்பு. விரும்தோம்பல் போன்ற பல உயர்ந்த பண்புகளுக்கு சொந்தக்காரர்கள் இந்த தம்பதியினர்.

ஒன்றே ஒன்று கண்ணே கண்ணு என தவமிருந்து பெற்ற பிள்ளைதான் இத்தம்பதியினரின் புதல்வர் அருண். இவர் இளங்கலை B.Sc., (Hotel Management and catering) படிப்பயையும் பின்னர் M.B.A. படிப்பையும் முடித்து தற்சமயம் சென்னை I.T. துறை நிறுவனமான Software Technology Company-ல் Administgrative Manager ஆக பணிபுரிந்து வருகிறார். சிறந்த பேச்சாளர். அருமையான நிகழ்ச்சி தொகுப்பாளர். தனது தாய், தந்தையரின் அத்தனை இனிய பண்புகளையும் இவரிடமும் காணலாம். இவர் தன் தாய்மாமன் திரு சுவாமிநாதன் அவர்களின் புதல்வி சுகன்யாவை மணந்து இல்லறத்தை நல்லறமாக்கி இனிதே வாழ்க்கையை சிறப்புடன் நடத்தி வருகிறார். திருமதி சுகன்யா B.E. பட்டதாரி. பின் B.Ed. படிப்பை முடித்து சென்னையில் CBSE பள்ளியில் கணித ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார். மாமியார் மெச்சும் மருமகளாய், மாணவர்கள் போற்றும் ஆசிரியராய் வாழ்க்கையில் முத்திரை பதித்துள்ளார். அருண் – சுகன்யா தம்பதியினர் நாம் இருவர் நமக்கு இருவர் என்பதற்கேற்ப நட்சத்திரா, ஸ்ரீயாழினி என இரண்டு பெண் குழந்தையோடு மகிழ்வோடு வாழ்ந்து வருகிறார்கள்.

**மலர்ந்த முகமே வாழ்க்கையின் இன்பம்**
**நல்ல குடும்பம் ஒரு பல்கலைக்கழகம்**

என்பதற்கு தங்கள் தாய் தந்தையரை கல்விக் காவலராக்கி பெருமை சேர்க்கும் திரு M. சுவாமிநாதன், திரு M. கனகராஜ் திருமதி S. அமுதா ஆகியோர்களின் குடும்பமே சான்றாகும்.

புதிதாக இணையும் கல்விக்காவலர்கள் தங்களைப் பற்றிய செய்திகளைத் தருவார்கள். நாங்கள் அதைப் பிரசுரிப்போம். ஆனால் இக்கல்விக்காவலர்கள் நன்கொடையை வழங்கி, தங்களைப் பற்றி செய்தி எதுவும் போட வேண்டாம் எனக் கூறி செய்தி தர மறுத்துவிட்டதால் கல்வி வளர்ச்சிக் கழகமே தங்களுக்கு தெரிந்த செய்திகளை தயாரித்து வெளியிட்டுள்ளோம்.

இவர்களைப் போன்ற நல்ல உள்ளம் கொண்ட வள்ளல்கள் பெருகி வளர்ந்து சமுதாயத்திற்கு சிறப்பு சேர்க்க வேண்டும் என்பதே எங்களின் பேரவா. ஸ்ரீ மங்கைபாகர் அருளால் இக்குடும்பத்தினர்கள் அனைவரும் நலமோடும், வளமோடும் வாழ நம் இறைவன் மங்கைபாகர் அருள்புரிய வேண்டி வணங்கி வாழ்த்துகிறோம்.





# முகப் பொலிவுக்கு பேரிச்சை

உடலுக்கு இரும்புச் சத்து கிடைக்க, மருத்துவர்கள் பரிந்துரைக்கும் உணவு பேரீச்சம் பழம், இது, உள் உறுப்புக்களை மட்டுமல்ல, சருமத்தையும் பாதுகாக்கும். அற்புத பலன் தரும் பேரீச்சம் பழத்தின் சிறப்புகளைப் பார்ப்போம்...

**முகம் பொலிவு பெற...**

இரண்டு பேரீச்சம் பழங்களை தண்ணீரில் ஊற வைத்து அரைக்கவும். அந்த விழுதுடன், ஒரு தேக்கரண்டி வெண்ணெய் சேர்த்து, முகத்தில் தடவுங்கள். சூரியன் உதிப்பது போல் முகம் பிரகாசமாகும். வாரம் இரண்டு முறை இதைச் செய்யலாம்.

**நோய் பாதித்தவருக்கு முகம் பொலிவிழந்து காணப்படும். அந்த வாட்டம் போக்க...**

பேரீச்சம்பழம்-மூன்று, வெள்ளரிக்காய் ஜூஸ், கேரட் ஜூஸ்-அரை கப், புதினா சாறு, எலுமிச்சைச் சாறு-தலா இரண்டு தேக்கரண்டி எடுக்கவும். இவற்றைக் கலந்து, விழுதாக அரைக்கவும். இந்தப் பேஸ்ட்டை முகத்தில் பூசி, நன்கு மசாஜ் செய்து கழுவவும், தினமும் இப்படிச் செய்து வர முகம் புதுப்பொலிவு பெறும்.

**முகத்திட்டுக்களும், கருவளையமும் மறைய...**

சிலருக்கு 40 வயதுக்கு மேல் முகம் வெளிறி, கண்களைச் சுற்றி கருவளையம் விழுந்து, முகமெல்லாம் திட்டுகளாக காணப்படும். இந்த திட்டுகள் மறைய...

பேரீச்சம் பழங்களை முதல் நாள் இரவே, தண்ணீரில் ஊற வைக்கவும். மறுநாள், அந்தத் தண்ணீரில், முல்தானி மெட்டி பவுடர், ஒரு தேக்கரண்டி கலந்து, முகத்தில் பூசவும். கண்களைச் சுற்றியுள்ள கருவளையம், திட்டுகள் மறைந்து முகம் பொலிவு பெறும்.

**வாய் துர்நாற்றம் போக்க...**

இரண்டு பேரீச்சம் பழங்களை, ஒரு டம்ளர் தண்ணீரில் ஊற வைக்கவும். இந்தத் தண்ணீரால் வாய் கொப்பளிக்கவும், பற்கள் மின்னுவதுடன், சுவாசப் புத்துணர்வும் கிடைக்கும்.

**இமை அடர்த்தியாக...**

பேரீச்சம் பழம் ஊற வைத்த தண்ணீருடன், ஒரு தேக்கரண்டி விளக்கெண்ணை கலந்து, புருவம், இமைகளில் தடவவும். அடிக்கடி செய்து வர இமைகள் அடர்த்தியாகி, கண்கள் பொலிவு பெறும்.

**- D. பிரியதர்சினி B.Sc., திண்டுக்கல் (சிறுகுடி)**

# அருவியூர்த் தந்தை
# தெய்வத்திரு நல்ல சுப்பையா அவர்களுக்கு
# 95-ஆம் ஆண்டு பிறந்த நாள் வாழ்த்து



**09-07-1928** (ஜூலை 9)

அருவியூர் வடக்குவளவு நகரத்தார்கள் பொதுநலச் சங்கத்தின் தலைவராக 19 ஆண்டுகள் (இதில் உயர்திரு மு.ந. இராமநாதன் செட்டியார் அவர்களுடனும், தெய்வத்திரு ம.தி.சி. மணிக்காளைச் செட்டியார் அவர்களுடனும்) இணைந்து மூன்று முறைக்கு மேல் ஒற்றுமை உணர்வோடு மிகச்சிறப்பாக பணியாற்றி அருவியூர் வடக்குவளவு நகரத்தார்களுக்கு பெருமை சேர்த்திட்ட ஐயா அவர்களுக்கு பொதுநலச் சங்கத்தின் சார்பாகவும் அனைத்து ஊர் அ.வ.ந. சங்கங்களின் சார்பாகவும், கல்வி வளர்ச்சிக் கழகத்தின் சார்பாகவும் அனைத்து அ.வ. நகரத்தார்கள் சார்பாகவும் மனமார்ந்த இனிய 95-வது பிறந்த நாள் வாழ்த்துக்களை பணிவோடு சமர்ப்பிப்பதுடன் ஐயாவின் நல்லாசியுடன் சமூக வளர்ச்சிக்கு சிறப்பாக பணிபுரிவோம்.



**செ. ஆசை அலங்காரம்,**
**தலைவர்,**
**அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம்**



# படித்ததில் பிடித்தது-1

சொ. வைத்திலிங்கம், மதுரை.



**ஒரு சிறு முன்னுரை :**

சில தினங்களுக்கு முன் கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு S. ஆசை அலங்காரம் அவர்களைச் சிறுகுடியில் சந்திக்க நேர்ந்தது. அது சமயம் அவர் என்னிடம் "நகரத்தார் குரலில்' ஒரு இரண்டு, மூன்று பக்கத்துக்கு முன்பு எழுதி வெளியிட்டது போல் எழுதி அனுப்புங்கள் எனக் கேட்டுக் கொண்டார். இன்றைய சூழ்நிலையில் சிறுவர் முதல் பெரியவர்கள் வரை செல் வைத்துள்ளபடியால் அதைப் பார்த்துக் கொண்டு புத்தகப் படிப்பை அவ்வளவாக விரும்பாத நிலையைத்தான் பார்க்கிறோம். ஆகவே நான் தற்போது ஏதும் எழுதி வெளிடுவதை நிறுத்திவிட்டேன். இருந்தாலும் நிறையச் செய்திகளைப் படிக்கிறேன். படித்ததில் சுவாரஸ்யமாக ஏதாவது இருந்து குரலில் வெளியிட்டால் பலரும் படிக்க வாய்ப்பு உண்டு என்பதால் தலைவர் கேட்டுக்கொண்டபடி “படித்ததில் பிடித்ததைத்” தரலாமென எண்ணுகிறேன்.

அதன்படி இந்த செப்டம்பர் ’22 குரலில் ஒரு 15 வயது சிறுவன் பற்றிய செய்தியைத் தந்துள்ளேன். அவன் கடையில் ரொட்டி திருடுகிறான்; போலீஸில் பிடிபட்டு நீதிபதி முன் நிறுத்தப்படுகிறான். நீதிபதி விசாரித்து ஒரு வித்தியாசமான தீர்ப்பை வழங்குகிறார். அது என்ன தீர்ப்பு? படிக்க சுவாரஸ்யமாக இருக்கும். படிப்பீர்கள் என நம்பி **“படித்ததில் பிடித்தது – 1”** தந்துள்ளேன்.

**ஒரு 15 வயது சிறுவன் மீது வழக்கு. ஒரு அமெரிக்க நீதிபதியின் தீர்ப்பு :**

ஒரு பதினைந்து வயது சிறுவன்.... கடையில் ரொட்டி திருடும் போது பிடிபட்டான். காவலாளியின் பிடியில் இருந்து



தப்பிக்க முயன்ற போது கடையின் அலமாரியும் உடைந்தது. நீதிபதி குற்றத்தை விசாரித்து அந்தச் சிறுவனிடம், “உண்மையில் நீங்கள் ஏதாவது ரொட்டி மற்றும் பாலாடைக் கட்டி திருடினீர்களா?” எனக் கேட்டார். சிறுவன் கீழே பார்த்து பதிலளித்தான். “ஆம்”

**நீதிபதி** : ஏன்?

**பையன் :** எனக்கு அது தேவைப்பட்டது.

**நீதிபதி** : நீங்கள் வாங்கி இருக்க முடியாதா?

**பையன் :** வீட்டில் நோய்வாயப்பட்ட மற்றும் வேலையில்லாத அம்மா மட்டும் தான் இருக்காங்க....

**நீதிபதி** : நீங்கள் வேலை எதுவும் செய்யவில்லையா?

**பையன் :** கார் கழுவுவது வழக்கம் - என் அம்மாவைக் கவனித்துக் கொள்ள ஒரு நாள் விடுமுறை எடுத்த போது நான் வேலையிலிருந்து நீக்கப்பட்டேன்.

**நீதிபதி** : நீங்கள் யாரிடமும் உதவி கேட்கவில்லையா?

**பையன் :** காலையிலிருந்து வீட்டை விட்டு வெளியேறி, சுமார் ஐம்பது (50) பேரிடம் சென்று உதவி கேட்டேன். ஆனால் யாரும் உதவி செய்ய முன்வரவில்லை. எனவே வேறுவழியின்றி இந்த நடவடிக்கையை நான் கடைசியாக எடுக்க முடிவு செய்தேன்.

வாதங்கள் முடிந்ததும், நீதிபதி தீர்ப்பைச் சொல்லத் தொடங்கினார். “திருட்டு, குறிப்பாக பசியுள்ள சிறுவன் ரொட்டி திருடுவது மிகவும் வெட்கக்கேடான குற்றமாகும். இந்தக் குற்றத்திற்கு நாம் அனைவரும் பொறுப்பு. நான் உட்பட நீதிமன்றத்தில் உள்ள ஒவ்வொரு நபரும் குற்றவாளிகள். எனவே

இங்கு இருக்கும் ஒவ்வொரு நபருக்கும் தலா பத்து டாலர்கள் அபராதம் விதிக்கிறேன். பத்து டாலர் கொடுக்காமல் யாரும் இங்கிருந்து வெளியேற முடியாது" இவ்வாறு கூறி, நீதிபதி தனது

பாக்கெட்டிலிருந்து பத்து டாலரை எடுத்து, பேனாவை எடுத்து அதன்படி பெயரை எழுதத் தொடங்கினார்.

மேலும் பசித்த குழந்தையைப் போலீசிடம் ஒப்படைத்ததற்காகக் சம்பந்தப்பட்ட கடைக்கு ஆயிரம் டாலர் அபராதம் விதிக்கிறேன். 24 மணி நேரத்திற்குள் அபராதத் தொகையை டெபாசிட் செய்யாவிட்டால், கடைக்கு சீல் வைக்க நீதிமன்றம் உத்தரவிடும். மேலும் பட்டினி கிடக்கும் சிறுவன் பற்றி நீதிமன்றத்தில் தாக்கல் செய்ததற்காக காவல் துறைக்கு அதே தொகை அபராதம் விதிக்கப்படுகிறது. இந்த சிறுவனுக்கு அபராதத் தொகை முழுவதையும் கொடுத்து, அந்த சிறுவனிடம் நீதிமன்றம் மன்னிப்பு கேட்கிறது.

தீர்ப்பைக் கேட்டதும் நீதிமன்றத்தில் இருந்தவர்களின் கண்களில் இருந்து கண்ணீர் கொட்டியது. சிறுவனின் கை விலங்குகள் அவிழ்க்கப்பட்டன. கண்ணீரை மறைத்துக் கொண்டு வெளியே வந்த நீதிபதியைச் சிறுவன் மீண்டும், மீண்டும் பார்த்துக் கொண்டிருந்தான்.

**ஒரு சிறு பின்னுரை :**

பசியால் வாடும் ஒருவன் திருடிப் பிடிபட்டால் நமது நாட்டு மக்களும் வெட்கப்பட வேண்டும். உங்களைச் சுற்றியுள்ளவர்கள் உணவில்லாமல் தூங்கக் கூடாது என்று முடிவெடுத்து உணவு கொடுக்க ஒருவரையாவது தேர்ந்தெடுங்கள். இந்தச் செய்தியால் நீங்கள் ஈர்க்கப்பட்டால் உங்களைச் சுற்றிப் பார்த்து ஒருவரையாவது மகிழ்ச்சியடையச் செய்யுங்கள். உங்களிடம் உள்ளவற்றிலிருந்து சிறிதளவாவது தேவைப்படுபவருக்குக் கொடுத்து உதவுங்கள்.

நன்றி!



உ

சிறுகுடி தெய்வத்திரு எம். சண்முகம் பி.இ.
அவர்களின் நல்லாசியுடனும்,
பொதுமக்களின் பேராதரவுடனும்
8 –ஆம் ஆண்டாக வெற்றிநடை போடும்

# அர்ச்சனா ஜெனரல்ஸ்
# காளான்
## விற்பனை நிலையம்




**எங்களிடம் தங்கள் விசேஷத்திற்குத் தேவையான**

- பனீர்
- பட்டர்
- கோவா
- சீஸ்
- பால், தயிர்
- பேபிகார்ன்
- ஸ்வீட் கார்ன்
- ரெடிமேட் பூரி
- ரெடிமேட் புரோட்டா
- ரெடிமேட் சப்பாத்தி
- தண்ணீர் பாட்டில்
- ஐஸ்கிரீம்
- காளான் ஊறுகாய்
- ஸ்ரீதேவி பிரியாணி பேஸ்ட்
- Frozen Items



**ஆர்டரின் பேரில் ஏற்பாடு செய்து தரப்படும்.**

S. **பழனியப்பன்** B.E.,    ✆ 90257 87637, 70107 91246



# அர்ச்சனா ஜெனரல்ஸ்
# காளான்
## நேரடி விற்பனை நிலையம்
**(மொத்தம் & சில்லரை விற்பனை)**

தலைமை தபால் நிலையம் எதிரில், ST கொரியர் அருகில்,
ஸ்கீம் ரோடு, திண்டுக்கல் – 624 001.

E-mail : archanaageneralsdgl@yahoo.in

# கோவை அ.வ.ந. சங்கம் வழங்கிய கல்வி உதவித் தொகை





கோவை அ.வ.ந. சங்கம் மற்றும் கோவை சங்க கல்வி வளர்ச்சிக் கழகத்தின் சார்பில் 05-07-2022 அன்று நடைபெற்ற விழாவில் கோவை நகரத்தார் மாணவ மாணவி களுக்கு விலையில்லா 2 செட் சீருடைகள், தையல் கூலி ரூ.500/- மற்றும் விலையில்லா நோட்புக் வழங்கியும், பள்ளி கல்லூரிகளில் படிக்கும் மாணவ மாணவிகளுக்கு கல்வி கற்பதற்கு நிதி உதவி வழங்கியும் வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொண்டனர். பள்ளிக் கல்வி மாணவ மாணவிகளுக்கு நிதி உதவியாக ரூ. 3000/- மற்றும் கல்லூரிகளில் படிக்கும் குறிப்பாக B.E.. C.A. ப்ரொபஷனல் படிப்புகளுக்கு ரூ.5000/- நிதி உதவி வழங்கினார்கள். இந்த நிகழ்வில் கோவை சங்க நிர்வாகிகள் மற்றும் கோவை சங்க கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர் மற்றும் கோவை சங்க இளைஞர் பேரவை நிர்வாகிகள் கலந்து கொண்டு விழாவினை சிறப்பித்தனர்.

**தகவல் : கோவை அ.வ.ந. சங்கம், கோவை சங்க கல்வி வளர்ச்சிக் கழகம் மற்றும் இளைஞர் பேரவை.**

# ஆமலூருடையார் பங்காளிகள் 18 ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா



அரண்மனை நெடுவயல் அருள்மிகு சிவந்தி விநாயகரை குலதெய்வமாக வழிபாடு செய்து வரும் **ஆமலூருடையார் பங்காளிகள், சுபகிருது ஆவணி மீ 15 உ 31-08-2022 புதன்கிழமை அருள்மிகு சிவந்தி விநாயகருக்கு** அபிஷேக ஆராதனையுடன் **18 ஆம் ஆண்டு விநாயகர் சதுர்த்தி விழா** சிறப்பாக கொண்டாடப்பெற்றது. தொடர்ந்து **ஸ்ரீ சிவந்தி விநாயகர் திருக்கோவில் கும்பாபிஷேகம் சம்பந்தமான முதல் ஆலோசனைக் கூட்டமும்** சிறப்பாக நடைபெற்றது.

**- வெ. இராஜகோபால், செய்தி தொடர்பாளர், பொன்னமராவதி.**

ESTD : 1991

உ

ஸ்ரீ மங்கைநாயகர் தேனம்மை சுவாமிகள் துணை

Off : 0461 - 2328501
Res : 0461 - 2328502
91711 70000

நம் நகர பெருமக்களுக்கு நல்வாழ்த்துக்கள்

SARC

# ஸ்ரீ அலங்கார் ரெக்சின் சென்டர்

**Dealers in :**

**Rexine, Furniture and Furnishing Materials**

**ஒரு வருட உத்திரவாதத்துடன் தேக்கு மரக்கட்டில் - டபுள் மற்றும் மெத்தை ரூ. 15,100/- மட்டும்.**
**(தமிழகம் முழுவதும் டெலிவரி செய்யப்படும்).**

247-C/4, Palayamkottai Road, Near Old Bus-Stand, Tuticorin-628 002.
E-mail : alankarexine@gmail.com www.tuticorinalankarrexine.com

AB

# ஸ்ரீ அலங்கார் பில்டர்ஸ்

**Structural Engineer ❖ Licensed Surveyor in Tuticorin City Municipal Corporation**
**❖ Panel Valuer in Tuticorin District Central Co.op. Bank Ltd.,**

**கட்டிட வரைபடம், வடிவமைப்பு, முகப்புதோற்றம்,**
**கட்டிட மதிப்பீடு, வரைபட அனுமதி சான்று, வாஸ்து முறைப்படி கட்டிடங்கள்**
**சிறந்த முறையில் செய்து தரப்படும்.**

71-5, Balavinayagar Kovil Street, Upstairs Sri Alankar Rexine Centre,
Tuticorin- 628 002.
Email : tutyalankarbuilders@gmail.com www.tuticorinalankarrexine.com

நம் சமூக பணியில்....

**அரு. சோம சண்முகநாதன்**
**S. சிவகாமி**
**S. சசிகுமார் B.A.,DECM.,**
**Er. S. பிரஹலாதன் M.E.,**
**பூதமங்கலமூருடையார், உலகம்பட்டி.**



# சப்தஸ்தான பெருவிழா

ஆண்டுதோறும் சித்திரா பௌர்ணமி அன்று திருவையாற்றிலிருந்து ஐயாறப்பர், அறம் வளர்த்த நாயகி கண்ணாடி பல்லக்கிலும், நந்தியெம்பெருமாள், சுயசாம்பிகை வெட்டிவேர் பல்லக்கிலும் ஆறு ஊர்களுக்கு செல்கின்றார்கள்.

**மூன்றாவது பல்லக்கில்**

திருப்பழனம் : ஆபத்சகாயேஸ்வரர், பெரியநாயகி.

**நான்காவது பல்லக்கில்**

திருச்சோற்றுத்துறை ஓ தனவனேஸ்வரர், அன்னபூரணி

**ஐந்தாவது பல்லக்கில்**

திருவேதிக்குடி வேதபுரிஸ்வரர், மங்கையர்கக்கரசி

**ஆறாவது பல்லக்கில்**

திருக்கண்டியூர் பிரம்மசீர கண்டீசர், மங்களாம்பிகை

**ஏழாவது பல்லக்கில்**

திருப்பூந்தூடுத்தி புஷ்பவனேஸ்வரர், அழகாலமர்ந்த நாயகி

**எட்டாவது பல்லக்கில்**

திருநெய்யர்தாளம் நெய்யாடியப்பர், பாலாம்பிகை

எட்டுப் பல்லக்குகளும் ஒரே நேரத்தில் திருவையாறை அடையும். இங்கு பொம்மை மூலம் பூப்போடும் நிகழ்ச்சி நடைபெறும்.

இங்கு ஏழுதலத்து சிவன்கள், அம்பாள்கள் இருக்கும் இடம் சிவலோகமாக மாறி ஏழு கயிலையின் காட்சியைக் காணலாம். ஐயாரப்பர் ஆலயத்தில் அனைத்து தெய்வங்களுக்கும் தீபாராதனை காட்டப்படும். மனித வாழ்க்கையில் காண வேண்டிய அருமையான தெய்வீகக் காட்சியாகும். நாம் அனைவரும் ஒரு முறையாவது சித்ரா பௌர்ணமி அன்று திருவையாறு சென்று தரிசிப்போம். இறையருள் பெற்று வளமுடன் வாழ்வோம்.

**– V. கணேசன், தலைவர், அ.வ.ந. சங்கம், V. புதூர்.**





# தீபாவளி வழிபாடுகள்

தீபாவளி அன்று அதிகாலையில் எழுந்து எண்ணெய் தேய்த்து தலைமுழுகினால் நம் பாவங்கள் எல்லாம் போய்விடும் என்பது நம்பிக்கை. அன்று சிவபெருமான் உலகிலுள்ள நீர்நிலை அனைத்திற்குமே கங்கையின் புனிதத்தை வழங்குகிறார் என்பது நம்பிக்கை. இதன்படி அன்று நம் வீட்டில் உள்ள கிணறு, குழாய் ஆகியவற்றில் வரும் தண்ணீர் அனைத்தும் கங்கை நீராகவே பாவிக்கப்படும். இதனால்தான் அன்று காலையில் நீராடுவதை கங்கா ஸ்நானம் ஆச்சா என்று கேட்கிறார்கள். எண்ணெயில் திருமகளும், வெந்நீரில் கங்கையும் அன்று ஒன்று சேர்வதால், அன்று எண்ணெய்க் குளியல் செய்பவர்க்கு கங்கையில் குளித்த புனிதப்பலன் கிடைக்கும்.

தீபாவளியன்று சூரிய உதயத்துக்கு நான்கு நாழிகைக்கு முன் எண்ணெய் தேய்த்துக் குளிக்க வேண்டும். நான்கு நாழிகை என்றால் 96 நிமிடம். அதவாது 6 மணிக்கு சூரிய உதயம் என்றால், அதிகாலை 4.20-க்கு குளித்துவிட வேண்டும்.

தீபாவளியன்று எண்ணெய் தேய்த்துக் குளித்ததும், புதிய ஆடைகளையும், புதிய பலகாரங்களையும் வைத்து வணங்குவது வழக்கம். இது முன்னோர்களுக்குச் செய்யும் படையல் ஆகும். அன்று முன்னோர்கள் நம் இல்லங்களுக்கு வருவதாக நம்பிக்கை. நரகத்தில் இருப்பவர்கள் கூட அன்று விடுதலையாகி வீடுகளுக்கு வருவர் என்று புராணங்கள் கூறுகின்றன. இதனால்தான் 'நரக சதுர்த்தி' என்று பெயரும் ஏற்பட்டது.

செல்வத்தின் அதிபதியான திருமகளின் அருள் கிடைக்க, தீபாவளி அன்றோ, அதற்கு மறுநாளோ, வீட்டில் லட்சுமி குபேர பூஜை செய்வது வழக்கம். லட்சுமி கடாட்சத்தை அருளும் குபேரனுக்கு ராஜாதி ராஜன் என்ற பெயரும் உண்டு. யட்ச கணங்களின் தலைவரான குபேரன், சாந்த குணம் கொண்டவர்.

'பஞ்சதசீ' எனும் மந்திரத்தை எப்போதும் உச்சரிக்கும் இவர் இருக்கும் இடத்தில் திருமகள் நித்தியவாசம் செய்வாள் என்பது நம்பிக்கை. தீபாவளியில் மட்டுமின்றி, வெள்ளிக்கிழமைகளிலும் இவரை வெண்ணிற மலர்கள் தூவி வழிபட்டால், லட்சுமி கடாட்சம் கிடைக்கும்.

தீபாவளியில் செய்யக்கூடிய இன்னொரு பூஜை, தன்வந்திரி பூஜை, பாற்கடலைக் கடையும்போது தோன்றியவர் தன்வந்திரி பகவான். இவர் மருத்துவக் கடவுள். கையில் அமுத கலசம், மருத்துவச் சுவடிகளுடன் அருள் பாலித்து வருகிறார்.

**-M.D. பிரியதர்சினி B.Sc., திண்டுக்கல் (சிறுகுடி)**

**அவசியம்**

தோல்வி வந்தால் பொறுமை அவசியம்
வெற்றி வந்தால் பணிவு அவசியம்
எதிர்ப்பு வந்தால் துணிவு அவசியம்
எதுவந்தாலும் நம்பிக்கை அவசியம்


I. சாமி ஆஸ், கோவை.

**ஸ்ரீ மங்கைபாகர் தேனம்மை திருமண தகவல் மையம், கோவை**

இலவச சேவை-கட்டணம் இல்லை. பதிவிடுங்கள்

சமூகப் பெருமக்களே! பெற்றோர்களே!

மணமகன்-மணமகள் தேவைக்கு உரிய விவரத்துடன் தபால் அனுப்புங்கள். வரிசைப்படி நம்பர் பதிவு செய்து பதிவேட்டில் விபரம் எழுதி விரைவில் திருமணம் கைகூட வழி காண்பிக்கிறோம். 18-07-2006-இல் தொடங்கிய இச்சேவையில் பதிவானது 495. இணைந்த தம்பதிகள் 374. காத்து இருப்பது ஆண் - 102, பெண் - 19, ஆக 121. பெண் பதிவு மிக மிக குறைவு. பெண்வீட்டார்கள் முன் வந்து பதிவு கொடுத்தால் சமூக இனம் பெருக சமூகம் வளரும். பெண் வீட்டார்கள் ஒத்துழைப்பு கொடுக்க வேண்டுகிறோம்.


திரு. P.L. ரெங்கசாமி

பி.எல்.ஆர். திருமுருகன் ஸ்டோர்ஸ்
நெ. 18, எம்.கே.ஜி. லே அவுட்
ITI பின்புறம் GN மில்
கோயமுத்தூர் - 641 029.
செல் : 99523 49855

குறிப்பு : நேரில் வந்து கலந்து பேசினால் உடன் திருமணம் கைகூட வாய்ப்பு அதிகம்.

# மலரட்டும் மனிதநேயம்



பயிர்வாட மனம்வாடி நின்ற பேர்கள்
பகலவனாய் இன்று வரை வாழுகின்றார்!
உயிர்களிடம் அன்புதனை வைத்தோர் எல்லாம்.
உலகுபுகழ் மனிதராக தோன்றுகின்றார் பயிற்றுவிப்போம்!
மனங்களிலே, விதைத்தே வைப்போம்! பகையற்ற வாழ்வுக்கே
வழியை நாமும்! துயில்நீக்க தோன்றுகின்ற விடியல் போல
துயர்கண்டு உள்ளம் கொள்வோம்!

வலிகொண்ட மனிதர்தம் வலிய கற்றி
வழியற்ற மனதர்க்கு வழியைக் காட்டி
நலிவுற்ற உயிர்களிடம் அன்பு காட்டி
நதிபோல நாம் வாழ்ந்தே உலகம் காப்போம்!
ஒளிவெள்ளம் போலின்பம் பெருகச் செய்தே
உயிர்களிடம் நேயத்தை வளரச் செய்வோம்!
கொதிப்ப கற்றும் குளிராக வாழ்ந்தேதான் மனிதம் காப்போம்!

இன்றிருக்கும் நிலையாவும் நாளை மாறும்.
இல்லாமல் போகும்நம் உயிரும் கூட!
தன்னலத்தை முன்வைத்தே வாழும் வாழ்வைத்
தள்ளிவைத்தே, பொதுநலத்தை மனதில் ஏற்போம்!
கண்ணிலிருந்தும் குருடராக வாழ்தல் விட்டு
கண்மூடும் நாள்வரையில் ஒளியாய் வாழ்வோம்!
துன்பத்தில் வாழ்வோரும் இன்பம் காண
துணையாக நிற்கின்ற நேயம் கொள்வோம்!



உலகெங்கும் காணுகின்ற உச்சமெல்லாம்
ஒப்பற்ற மனிதரினம் படைத்த தென்போம்!
நிலவினிலும் கால்வைத்த மனிதர் தம்மை,
நிர்மூலம் செய்கின்ற கொரோனா இன்று!
கலயத்தின் மீதெறிந்த கல்லாய், நம்மைக்
கதிகலங்க வைக்கிறது இதுதான் வாழ்க்கை!
கலங்குவோரே, இனியேனும் மாற்றம் கொள்வோம்!
கனிவான மனிதநேயம் மலரச் செய்வோம்!

- தென்னரசி கணேசன்,
கோவை.

# நம்மவருக்கு தமிழ்ப் பற்றாளர் விருது



புதுவைத் தமிழ்ச் சங்கம் சார்பில் 17-07-2022 ஞாயிற்றுக்கிழமை அன்று நடைபெற்ற விழாவில் சிறப்பு விருந்தினர்கள் மாண்புமிகு ஏம்பலம் R. செல்வம், சபாநாயகர், புதுவை அரசு, திரு N.S.J. ஜெயபால் Ex MLA., செயலாளர்-என்.ஆர் காங்கிரஸ், புதுவை இவர்கள் முன்னிலையில் கோவை கு. கணேசன் அவர்களுக்கு **தமிழ்ப்பற்றாளர்** விருது வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

**தகவல் : கு. கணேசன், கோவை**

## பொன்மொழிகள்

தடம் பார்த்து நடப்பவர்கள் மனிதர்கள்
தடம் பதித்து நடப்பவர்கள் மாமனிதர்கள்

செல்வம் இல்லாவிட்டால் உன்னை உலகிற்குத் தெரியாது
செல்வம் வந்துவிட்டால் உன்னை உனக்கே தெரியாது.

**- N. சரவணன்,**
Mines Manager, செட்டிநாடு சிமெண்ட்ஸ், கரிக்கால ஒர்க்ஸ்.



# தாய்ப்பால்

இது குழந்தைக்கான முதல் பரிசு. புவியில் தோன்றும் ஒவ்வொரு குழந்தைக்கும் கிடைக்கக்கூடிய, கிடைக்க வேண்டிய அற்புதமான முதல் பரிசு தாய்ப்பால். பிறந்த குழந்தைக்கு இது முதல் தடுப்பு மருந்தும், தன்னிகரற்ற உணவும் ஆகும். தாய்ப்பால் கொடுப்பதால் தங்களின் அழகு குறையும் என்ற தவறான எண்ணம் கொண்டுள்ளோரும், தாய்ப்பால் மகத்துவம் மற்றும் அதனால் தாய் சேய் இருவருக்கும் ஏற்படும் நன்மைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தவே ஒவ்வொரு ஆண்டும் ஆகஸ்ட் 1 முதல் 7 தேதிவரை உலகம் முழுவதும் தாய்ப்பால் வாரமாக கடைப்பிடிக்கப்படுகிறது.

குழந்தை பிறந்த ஒரு மணி நேரத்தில், சிசேரியன் எனில் தாய் நலமான 4 மணி நேரத்தில் தாய்ப்பால் அவசியம் கொடுக்க வேண்டும். "Liquid Gold" என அழைக்கப்படும் இப்பாலில் நிமோனியா, ஆஸ்துமா போன்ற நோய்களைத் தடுக்கும் நோய் எதிர்ப்பு சக்தியும், குடல் வளர்ச்சிக்கான சத்தும், கண்பார்வைக்குத் தேவைப்படும் Vitamin A சத்தும் அதிக அளவில் உள்ளது.

குழந்தைகள் அழும்போதெல்லாம் தாய்ப்பால் ஊட்ட வேண்டும். பகலில் 6 – 7 முறையும், இரவில் 4 முறைக்கு குறையாமலும் பால் ஊட்ட வேண்டும். குழந்தைக்கு உடல் மற்றும் மனவளர்ச்சிக்கு உறுதுணையாய் இருப்பது தாய்ப்பால். அது தாய்க்கும், சேய்க்கும் இடையே ஒரு உன்னதமான உறவுப் பாலமாய் பந்தத்தையும், உளவியல் ரீதியாக அரவணைப்பு மற்றும் பாதுகாப்பு உணர்வுகளைத் தருகிறது. வயிற்று உபாதைகள், ஆஸ்த்துமா ஒவ்வாமை, நிமோனியா, மூளைக் காய்ச்சல், உடல்பருமன், குழந்தைப்பருவ புற்றுநோய், நீரிழிவு, இரத்த அழுத்தம் போன்ற நோய்களிலிருந்து காக்கவல்ல ஆற்றல் தாய்பாலுக்கு உண்டு.

தாய்ப்பால் தருவதால் பேறுகாலத்திற்குப் பின் தாய்க்கு ஏற்படும் ரத்தப்போக்கு குறையும். மார்பகப்புற்று நோய் மற்றும் கருப்பை புற்றுநோய் வராமல் தடுக்கும். மனிதமூளை வளர்ச்சி 3/4 பங்கு 3 வயதிற்குள் முடிந்து விடும். சீரான மூளை வளர்ச்சி, மனவளர்ச்சிக்குத் தேவையான DHA மற்றும் ஒமேகா-3 அமிலக் கொழுப்பு (Omega 3 - Fatty Acid) தாய்ப்பாலில் இருப்பதால் குழந்தைகளின் அறிவுத்திறன் மேம்படும். பாசமும், நேசமும் கலந்த தாய்ப்பால் என்னும் அமுதத்தை உட்கொள்ளும் குழந்தைகள் பல்லாண்டு காலம் நோயின்றி வாழ்வார்கள். "உண்ண உண்ண தெவிட்டாத அம்மை உயிரெனும் முலையினில் உணர்வெனும் பால்" எனும் பாரதி வரிகளுக்கு ஏற்ப தாய்ப்பால் ஊட்டுவோம், தாய் சேய் நலனைப் பேணுவோம்.

**– A. கண்ணகி, சிறுகுடி**

# அருள்மிகு ஸ்ரீ சோலையாண்டவர் சுவாமி திருக்கோயில் கூட்டு வழிபாடு

பூமங்கலப்பட்டி அருள்மிகு ஸ்ரீ சோலையாண்டவர் சுவாமி திருக்கோயிலில் ஆடிப்படையல் கூட்டு வழிபாடு 07.08.2022 ஞாயிறு அன்று சிறப்பாக நடைபெற்றது.

இந்த விழாவில் பொன்னமராவதி பூண்டிலூருடையார், வரதலூருடையார், பொன்னமராவதி திருவப்பூருடையார் ஆகிய குடிப்பட்டங்களைச் சேர்ந்த பங்காளிகள் மற்றும் நமது அ.வ.ந. பொதுநலச் சங்கத் தலைவர் திரு M.S. முருகப்பன் செட்டியார் அவர்கள் மற்றும் நமது சமூகப் பெருமக்கள், மாமன் மைத்துனர்கள், ஊர்ப்பொதுமக்கள் என அனைவரும் சுற்றம் சூழ வருகை தந்து விழாவினை சிறப்பித்தார்கள். ஆச்சிமார்கள் மாவிளக்கு ஆரத்தியுடன் தொடங்கி, சுவாமிக்கு படையல் போட்டு, பக்தர்களுக்கு காலை, மதிய வேளைகளில் அன்னதானம் வழங்கப்பட்டு, வழிபாடு சிறப்பாக நடைபெற்றது.

இவ்விழாவில் கலந்து கொண்ட அனைவருக்கும் விழாக் குழுவினரின் சார்பாக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**தகவல்: மா. அருணகிரி, சொக்கம்பட்டி & N. சேதுராமன், சேலம்.**

உ

# படமிஞ்சி
# அருள்மிகு ஸ்ரீமுத்து மயிலம்மாள் சுவாமி கோவில் 44-ம் ஆண்டு ஆடி மாத படையல் விழா

முதல் நாள் 30.07.2022 சனிக்கிழமை அன்று மாலை 6-00 மணியளவில் மங்கள இசையுடன் தேவாரப்பாடல், சிவாச்சாரியார் பாலாஜி குருக்கள் முன்னிருந்து நடத்தித் தர கழுகக்கூருடையார் பங்காளிகள் அனைவரும் திருவிளக்கு பூஜையில் கலந்து கொண்டு சிறப்பு செய்தனர்.

இரண்டாம் நாள் 31.07.2022 ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5-00 மணியளவில் தேவாரப் பாடலுடன், மங்கள இசையுடன் சிவாச்சாரியார் பாலாஜி குருக்கள் தலைமையில் கணபதி ஹோமம், சரஸ்வதி ஹோமம் பங்காளிகள் முன்னிலையில் சிறப்புடன் நடைபெற்றது. பிறகு 7.00 மணியளவில் திரு இரா. சொக்கலிங்கம் பூசாரி தலைமையில் பொங்கல் பானைக்கு தீர்த்தம் எடுத்து வந்து விநாயகப் பானையில் பொங்கல் வைத்து 11.00 மணியளவில் சாமிக்கு பொங்கல் வைத்து வழிபாடு செய்யப்பட்டது. 11.30 மணியளவில் ஆடிப்படையல் விழா சிறப்பாக நடைபெறுவதற்கு உறுதுணையாக இருந்த பங்காளிகள் அனைவருக்கும் உயர்திரு M.S.M. சுவாமிநாதன் தலைமையிலும் உயர்திரு மு. சக்திவேல் முன்னிலையிலும் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டது. 12.00 மணியளவில் அனைவருக்கும் அன்னதானம் வழங்கப்பட்டது. பிறகு 2.00 மணியளவில் கருப்பர் கோவில், விநாயகர் கோவில் சென்று தரிசனம் செய்யப்பட்டது. மாலை 4.00 மணியளவில் அனைத்து பங்காளிகளும் ஸ்ரீ முத்து மயிலம்மாள் அருளாசியுடன் விடை பெற்று, முகமலர்ச்சியுடன் தங்களது இல்லத்திற்குச் சென்றார்கள். 44-வது ஆடிப் படையல் விழா மிகவும் சீறும் சிறப்போடும் நடைபெற ஒத்துழைத்த அனைவருக்கும் உயர்திரு M.S.M. சுவாமிநாதன் நன்றியையும், பாராட்டுதலையும், வாழ்த்துக் களையும் தெரிவித்துள்ளார்கள்.

**தகவல் : கழுகக்கூருடையார் கோவில் பங்காளிகள், நிர்வாகிகள்**

# 42 வது கல்விக்காவலரின் குடும்பத்தினர்



திரு M. சுவாமிநாதன் குடும்பத்தினர்



திரு M. கனகராஜ் குடும்பத்தினர்



திருமதி. S. அமுதா - M. சுப்பையா குடும்பத்தினர்

அருமைமிகு பேத்திகள்









பொருள்கருவி காலம் வினையிடனொ டைந்தும்
இருள்தீர எண்ணிச் செயல்
- திருவள்ளுவம்

## நல்வாழ்த்துகளுடன்...

**DEEPA ERECTORS PRIVATE LIMITED**
No. 16/5, 1st Main Road, Ramakrishna Nagar,
Ernavoor, Chennai - 600057
mail to : depl@depltd.in

**PHOENIX OILFIELD SERVICES & CONTRACTING LLC**
P.O. BOX: 1151, WADI KABIR P.C. 117,
Sultanate of Oman.

*Specialists in :*

**Construction of Storage Tanks, Pressure Vessels, Pipelines and Blasting & Painting in India & Overseas**



R. Paramasivam B.E.,
***Managing Director***
Ph.: 9884660379



Pa. Mathivanan B.E.,
***Chief Executive Officer***
& A. Nivetha B.E., M.B.A.,
***Business Analyst***



Pa. Shankar B.E., M.S.,
(Sweden)
***Consultant***



பொன்னமராவதியில்
முதன் முறையாக
கோயில் பாரம்பரிய ஸ்தாபனம்
திருமண அழைப்பிதழுக்கான EXCLUSIVE ஷோரூம்
அருளரசு A/C கார்ட்ஸ்
அன்பு ! ஆனந்தம் !! அருளரசு !!!
ONLINE PURCHASE WITH SPL DISCOUNT FOR OUR AVN GROUP
WEDDING CARDS
RECEPTION CARDS
MULTICOLOR CARDS
SCREEN / FOIL CARDS
விதவிதமான தாம்பூலப் பைகள்
ALL OCCASIONS INVITATION CARDS
COMPLIMENTARY ITEMS
CUSTOMISED CARDS
9865119115
9842119115
நாட்டுக்கல் மெயின் ரோடு, பொன்னமராவதி.

நகரத்தார் குரல் சிறக்க வாழ்த்துக்கள்!

தலைமுறைகள் நீடித்து நிற்கும் கட்டிடங்களின் நம்பிக்கை

ATC

# அன்பு வணிக நிலையம்

அண்ணாசாலை, பொன்னமராவதி - 622 407.

போன்: 04333 262095 செல்: 94421 60385, 94434 13223

Texmo Industries
Est. 1956
டேரோ பம்புகள்

மகத்தான அறுவடையின் ரகசியம்

Taro Pumps

TWO YEAR WARRANTY 2

GM
SWITCH TO A BETTER WORLD

NIPPON PAINT

ESSCO BY Jaquar GROUP

UltraTech CEMENT
The Engineer's Choice

Chettinad cement

RAMCO SUPERGRADE
As strong as family bonds.

AMMAN-TRY TMT BARS
500 guarD
கட்டிடங்களின் பாதுகாவலன்

SRI DURGA TMT

TNPL Cement
Give your building life long protection!

TATA TISCON SD
SUPER DUCTILE REBARS

Birla White
THE WHITEST WHITE CEMENT

FinOlex INDUSTRIES

# கோவை அ.வ.ந. மகளிர் சங்கம் சார்பில் திருவிளக்கு பூஜை



கோவை அருவியூர் வடக்குவளவு நகரத்தார் மகளிர் சங்கம் சார்பில் கோவை அ.வ.ந. சங்க கட்டடத்தில் 05-08-2022 அன்று ஆடி வெள்ளி மற்றும் வரலட்சுமி பூஜை முன்னிட்டு திருவிளக்கு பூஜை நடைபெற்றது. பூஜையில் மகளிர் சங்க உறுப்பினர்கள், கோவை அ.வ.ந. சங்க நிர்வாகிகள் மற்றும் இளைஞர் பேரவை நிர்வாகிகள் அனைவரும் கலந்து கொண்டு சிறப்பித்தனர். நமது நகரத்தார் பெருமக்கள் அனைவரும் எல்லா வளமும் எல்லா நலமும் பெற வேண்டி இந்த சிறப்பு திருவிளக்கு பூஜை நடைபெற்றது.

**தகவல் : திரு KS. பிரகாஷ், செய்தித் தொடர்பாளர், கோவை அ.வ.ந. சங்கம்.**


வாழ்க வையகம்! உ வாழ்க வளமுடன்!!

**நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்**

மக்கள் நோயற்ற வாழ்வு வாழவும், நோய் வந்தால் விரைவாக குணம் பெற்று நலமுடன் வாழவும் வாழ்த்துகிறோம்.

**ஸ்ரீஅம்பாள் மெடிக்கல்ஸ்**

பஸ் ஸ்டாண்டு முன்புறம், பொன்னமராவதி - 622 407.

**லயன் மு. வையாபுரி ராஜ்குமார். செல் : 98426 50806**

**ஸ்ரீஅம்பாள் மெடிக்கல்ஸ்**

127, முருகன் காம்ப்ளக்ஸ், கோவைபுதூர், கோவை - 641 042.

**மு. கார்த்திக் D.Pharm., செல் : 98426 50506**

**நியூ ஸ்ரீஅம்பாள் மெடிக்கல்ஸ்**

அம்பேத்கார் சதுக்கம், அறிவொளி நகர், கோவை - 641 042.

அரசு ராமனாதன் MCA., செல் : 98422 44497





# கல்விக் காவலர்கள்

1. **மே 2004 : முதல் கல்விக் காவலர், ஆமலூருடையார், தெய்வத்திரு. வெ.ராம. சுப்பிரமணியன் செட்டியார் – அன்னபூரணி ஆச்சி அவர்கள், அம்மன் குறிச்சி, சென்னை.**
2. ஜூலை 2004 : மேலூருடையார், **திரு. தே.மா. பழனிச்சாமி செட்டியார் – திருமதி. சரஸ்வதி ஆச்சி** அவர்கள், பொன்னமராவதி.
3. செப்டம்பர் 2006 : கழனிவாசலூருடையார் **திரு.நா. சுப்பிரமணியன்** BSc., CAIIB **திருமதி. தமிழ்ச்செல்வி** B.Lit., அவர்கள், கல்லம்பட்டி, சென்னை.
4. **மார்ச் 2007 : நாவலூருடையார், திரு. ச. கனகசபை B.E., மனோரஞ்சிதம்** அவர்கள், உலகம்பட்டி, திருச்சி.
5. ஜூலை 2007 : கழூகக்கூருடையார், **தெய்வத்திரு. இராம. வேலாயுதம் செட்டியார் – பார்வதி ஆச்சி** அவர்கள், படமிஞ்சி, சென்னை.
6. நவம்பர் 2007 : கழனிவாசலூருடையார், **தெய்வத்திரு. மு.சி.கி. நாராயணன் செட்டியார் – இராஜமாணிக்கம் ஆச்சி** அவர்கள்,கல்லம்பட்டி.
7. மே 2010 : சிக்கலூருடையார், **தெய்வத்திரு. நல்லாசிரியர் மெ. இளங்கோ – சாவித்திரி** அவர்கள். வா.புதூர்.
8. ஜூலை 2011 : அரும்பாக்கிளையார். திரு. **M.M. தியாகராஜன் B.Sc., தெய்வத் திருமதி. ஜோதிமணி** அவர்கள் புழுதிப்பட்டி. மதுரை.
9. ஜனவரி 2012 : பொன்னமராவதி பூண்டிலூருடையார். தெய்வத்திரு. மா. தங்கராஜன் – அழகுமீனாள் அவர்கள், புழுதிபட்டி பெங்களூரு.
10. மார்ச் 2012 : கழூகக்கூருடையார். **தெய்வத்திரு. மு.ஆ. இராமசாமி செட்டியார். தெய்வத்திருமதி. இராஜாமணி ஆச்சி,** சொக்கம்பட்டி.
11. மே 2012 : நாவலூருடையார், **திரு. ச. சொக்கலிங்கம் செட்டியார் – தெய்வத்திருமதி. தனபாக்கியம் ஆச்சி** அவர்கள் உலகம்பட்டி.
12. **ஜூலை 2012 : கழனிவாசலூருடையார். திரு. P.L. இராமஜெயம், பத்மாவதி அவர்கள், பொன்னமராவதி.**
13. செப்படம்பர் 2012 : கழூகக்கூருடையார். **தெய்வத்திரு.** M.S.M. **மாணிக்கம் செட்டியார் – சரஸ்வதி ஆச்சி** அவர்கள், பொன்னமராவதி.
14. **நவம்பர் 2012 : பணப்பாக்குமூருடையார். தெய்வத்திரு. கு. சொக்கலிங்கம் செட்டியார் – சொ. தேனம்மாள் ஆச்சி, செம்பூதி.**
15. மார்ச் 2013 - அரும்பாக்கிளையார், **தெய்வத்திரு. இராம. கதிரேசன் செட்டியார். திருமதி.முத்துலெட்சுமி ஆச்சி,** புழுதிப்பட்டி.
16. **மே 2013 : மேலூருடையார். தெய்வத்திரு. தே.மா. நாராயணன் செட்டியார் – சண்முகவள்ளி ஆச்சி,** பொன்னமராவதி.
17. ஜூலை 2013 : பூதமங்கலமூருடையார். **திரு. ச. இராமலிங்கம் – இராஜமாணிக்கம்,** அயனாவரம். சென்னை.
18. நவம்பர் 2013 : ஆமலூருடையார். **திரு. வெ.இராம.சுப. துரைராசு செட்டியார் – மீனாட்சி ஆச்சி,** அம்மன்குறிச்சி, சென்னை

19. ஜனவரி 2014 : நாவலூருடையார். **தெய்வத்திரு. அரு. வேலாயுதம் செட்டியார் – சம்பூர்ணம் ஆச்சி,** பொய்யாமணிப்பட்டி.

**20. மார்ச் 2014 : பூதமங்கலமூருடையார். திரு. R. பரமசிவம் B.E., தெய்வத்திருமதி. சிவகாம சுந்தரி, பொன்னமராவதி, சென்னை.**

**21. ஜனவரி 2015 : பூதமங்கலமுருடையார். திரு. அ.சொ. சண்முகம் செட்டியார் – ஜெயபாரதி ஆச்சி, அம்மன்குறிச்சி, திருச்சி.**

**22. மார்ச் 2015 : அரும்பாக்கிளையார். திரு. A.P. ஜெயபால் – புவனேஸ்வரி, பொன்னமராவதி, ஈராடு.**

23. ஏப்ரல் 2015 : கழுகக்கூருடையார், **தெய்வத்திரு. ம.வெ. நாராயணன் செட்டியார் – மீனாட்சி ஆச்சி** உலகம்பட்டி.

24. ஏப்ரல் 2015 : நாவலூருடையார். **திரு. சித. நடராஜன் செட்டியார், தெய்வத்திருமதி. இராஜம்மாள் ஆச்சி,** பொய்யாமணிப்பட்டி.

25. மே 2015 : நாவலூருடையார். **திரு. அரு.வே. மாணிக்கவேலு – சரஸ்வதி,** பொன்னமராவதி.

**26. ஜூலை 2015 : ஆமலூருடையார். திரு. வெ.இராம.சுப. செல்வம்** B.Sc., ACA., **– ஆனந்தம் ஆச்சி, அம்மன்குறிச்சி, சென்னை.**

27. ஜனவரி 2016 : அரும்பாக்கிளையார், தெய்வத்திரு. **மங்கைபாகன் செட்டியார் – சிகப்பி ஆச்சி,** புழுதிப்பட்டி.

28. மே 2016 : கழுகக்கூருடையார், **திரு. சி.சொ.மு. இராமையா செட்டியார் – தெய்வத்திருமதி. ஜெகநாதம் ஆச்சி,** கொன்னைப்பட்டி, தேனி.

29. செப்டம்பர் 2017 : ஆமலூருடையார். **திரு. வெ.இராம.சுப. நேசமணி செட்டியார் – அருள்நிதி புவனேஸ்வரி ஆச்சி,** அம்மன்குறிச்சி, சென்னை.

30. ஜனவரி 2018 : பணப்பாக்கூருடையார் **தெய்வத்திரு. சுப. மணிவாசகம் செட்டியார் – தேன்மொழி ஆச்சி,** காரைக்குடி.

31. செப்டம்பர் 2018 : கழுகக்கூருடையார் **திரு. சோம. கதிரேசன் செட்டியார் – தவமணி ஆச்சி,** பொன்னமராவதி, தொட்டாம்பாளையம்.

32. ஜூலை 2019 : அரும்பாக்கிளையார் **திரு. பொன். சிவஞானம் செட்டியார் – ராஜகுமாரி ஆச்சி,** சிறுகுடி.

**33. ஆகஸ்ட் 2019 : நாவலூருடையார் தெய்வத்திரு. சித. மாணிக்கம் செட்டியார் – அழகுமீனாள் ஆச்சி, பொய்யாமணிப்பட்டி.**

**34. ஆகஸ்ட் 2019 : வரதலூருடையார் ந. செல்வம் செட்டியார் – சிவயோகம் ஆச்சி, புழுதிபட்டி / கோவை.**

**35. ஜனவரி 2020 : பழனி ஆதிசைவ அன்னதான மடம் – அருள்மிகு பழனி ஆண்டவர் அறக்கட்டளை, பழனி.**

36. மார்ச் 2020 : மேலுருடையார் **தெய்வத்திரு. செ.பெ.அ. அலங்காரம் செட்டியார் – திருமதி. செம்பாயி ஆச்சி,** சிறுகுடி.

**37. அக்டோபர் 2020 :** பொன்னமராவதி **பூண்டிலூருடையார்**
**திரு. சி. வெள்ளனச்சாமி செட்டியார் - திருமதி. சாந்தி ஆச்சி, சிறுகுடி / கோவை.**

**38. டிசம்பர் 2020 :** கழனிவாசலூருடையார் **கிருங்காக்கோட்டை**
**திரு.** V. **லட்சுமணன் செட்டியார் - பாக்கியலட்சுமி ஆச்சி தம்பதியர்**

**39. மே 2021 :** மேலூருடையார் **செம்பூதி/பொன்னமராவதி** தெய்வத்திருவாளர்கள்
**தே.மா. சுப்பையா செட்டியார்- சுப. பூங்கோதை ஆச்சி**

40. **டிசம்பர் 2021 : பாளையூர் அம்பலம்கொண்டார் ஒடுவன்பட்டி/ தஞ்சை திரு S. மாணிக்கம் செட்டியார் – திருமதி சுசீலா ஆச்சி**

41. **பிப்ரவரி 2022 : கழுகக்கூருடையார் கிருங்காக்கோட்டை/கோவை தெய்வத்திருவாளர்கள் தேனப்பன் செட்டியார் – சந்திரா ஆச்சி**

42. **ஆகஸ்ட் 2022 : அரும்பாக்கிளையார் – சிறுகுடி தெய்வத்திரு. ம.பொ. மாணிக்கம் செட்டியார் – தெய்வத்திருமதி. ம.பொ.மா. வேலுமயிலி ஆச்சி.**

# இளைஞர்களுக்கு கடமைகளும் உண்டு



- ✓ இன்றைய இளம் வயதினர் சிலருக்கு கணினியை இயக்குவது நன்றாகத் தெரிகிறது. ஆனால் பயன்படுத்திய போர்வையை மடித்து வைக்கத்தான் தெரியவில்லை!
- ✓ கைபேசி அழைப்புகளை அவ்வப்போது சுத்தம் செய்யத் தெரிகிறது. ஆனால் சாப்பிட்ட பிறகு தட்டைக் கழுவி வைப்பது தான் கடினமாக இருக்கிறது!
- ✓ ஆன்லைனில் பயணத்திற்குப் பதிவு செய்யும் வித்தை தெரிகிறது. எதிரே அமர்ந்திருக்கும் பயணியைப் பார்த்து புன்னகைக்கத்தான் தெரியவில்லை!
- ✓ வாட்ஸ்அப் குரூப்பில் அன்பு சொட்டச் சொட்ட நண்பர்களிடம் தகவல் பரிமாற முடிகிறது. சொந்தப் பெற்றோரிடம் தூக்கியடிப்பது போலத்தான் பேச முடிகிறது!
- ✓ எந்த இடத்திலும் ஒரு நிமிடம் தாமதமானால் கோபம் கொப்பளித்துக் கொள்கிறது. ஆனால் அவர்களுக்காகக் காத்திருக்கும் பெற்றோரின் வலி புரிவதில்லை!
- ✓ எதைப் பெற்றாலும் உரிமையென எண்ணும் அவர்களுக்கு கடமைகளும் இருக்கின்றன என்பது ஒருபோதும் உறைப்பதில்லை.



– **திரு வெ. இறையன்பு** I.A.S.

தலைமைச் செயலாளர், தமிழ்நாடு அரசு.

# கோவை அ.வ.ந. சங்கத்தினரின் சுதந்திர தின கொடியேற்று விழா




இந்திய தேசத்தின் வைர விழா சுதந்திர தினத்தை முன்னிட்டு 15-08-2022 அன்று திங்கட்கிழமை சங்க கட்டிட வளாகத்தில் கோயமுத்தூர் அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கம், இளைஞர் பேரவை மற்றும் மகளிர் சங்கம் சார்பில், தேசியக்கொடியை சங்கத்தின் தலைவர் உயர்திரு A.P. ஸேதுராமன் அவர்கள் கொடியேற்றினார். இவ்விழாவில் சங்க நிர்வாகிகள், செயற்குழு மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். கலந்துகொண்ட அனைவருக்கும் காலை சிற்றுண்டி வழங்கப்பட்டது. நம் சமூக மாணவ மாணவியர்கள் பேச்சுப் போட்டி, ஓவியப் போட்டிகளில் கலந்து கொண்டு பரிசுகள் பெற்றனர். சங்க நிர்வாகிகள் அனைவருக்கும் சுதந்திர தின வாழ்த்துக்களை தெரிவித்தனர்.

**தகவல் : திரு KS. பிரகாஷ், க.வ. கழகச் செய்தித் தொடர்பாளர், கோவை.**







# 2021-2022-ல் பெருந்தொகை வழங்கிய நன்கொடையாளர்கள் 31.03.2022

**மாபெருங்கொடை வள்ளல்கள் :**

1. திரு. **A.P. ஸேதுராமன் – விஜயலட்சுமி,** கோவை.
2. திரு. **செல்வன் R.M. செந்தில்,** பொன்.புதுப்பட்டி.
3. திரு. **சொ. இராமநாதன் – சிவசக்தி** (செம்பதி) துபாய்.

**பெருங்கொடை வள்ளல்கள் :**

1. திரு. **சொ. வைத்திலிங்கம் செட்டியார் – பாப்பா ஆச்சி,** மதுரை.

**கொடை வள்ளல்கள் :**

1. திருமதி. **இராம. லதா அவர்கள்,** நத்தம்.
2. திரு. **து. அரவிந்த் குமார் B.E., M.S., – பத்மா B.E.,** சென்னை.
3. தெய்வத்திரு. **STKR. சக்திவேல் – ராஜலெட்சுமி,** பொன்னமராவதி.

**வள்ளல்கள் :**

1. திரு. **M. பாலகிருஷ்ணன் – பானுமதி ஆச்சி,** சிங்கம்புணரி.
2. திரு. **செ. ஆசை அலங்காரம் குடும்பத்தார்,** சிறுகுடி.
3. திரு. **M.S. முருகப்பன்,** பொன்னமராவதி.
4. திரு. **சொ. முருகேசன் – கவிதா,** சிவகாசி.
5. திரு. A. முருகன் - செல்வமணி நீடாமங்கலம்
6. திரு. T.M.R.S. சிவக்குமார் – அருணோதயம், கோவை
7. திரு. ம.சி.கு.கு. கணேசன் செட்டியார் – தென்னசரசி ஆச்சி கோவை

**6-12 மாணவர்களுக்கு உதவித்தொகை வழங்கும் நன்கொடையாளர்கள்**

1. **சிங்கம்புணரி மீனாட்சி நல்லதம்பி வலச்சேரிப்பட்டி தெய்வானை வள்ளியப்பன்** நினைவாக அவந பொதுநலச்சங்கம், பிரான்மலை.
2. தெய்வத்திரு. **மு.அ. பரமசிவம் செட்டியார் – அங்கம்மாள் ஆச்சி** குடும்பத்தார், பொன்.புதுப்பட்டி.
3. திரு. **சொ. வைத்திலிங்கம் செட்டியார் – பாப்பா ஆச்சி** குடும்பத்தார், மதுரை.
4. திரு. **தே.மா. பழனிச்சாமி செட்டியார் – பழ. சரஸ்வதி ஆச்சி** குடும்பத்தார், பொன்.புதுப்பட்டி.
5. தெய்வத்திரு. **தீ.பழ. பொன்னுச்சாமி செட்டியார் – அன்னமயிலி ஆச்சி** நினைவாக **A.P. ஸேதுராமன் – விஜயலட்சுமி,** கோவை.

**தங்கப்பதக்கம் வழங்கும் நன்கொடையாளர்கள் : 10ஆம் வகுப்பு**

1. முதல் கல்வி காவலர் நினைவாக, கல்விக்காவலர், கல்வி தாய் தந்தை சுப.நேசமணி செட்டியார் – புவனேஸ்வரி ஆச்சி சார்பாக கேப்டன். நே. சரவணன் பிரியா – சச்சின் நங்கநல்லூர் – சென்னை – 61
2. **அருவியூர் வடக்குவளவு நகரத்தார் சங்கம்,** கோவை.
3. திரு. **ஆ. ஆறுமுகம் – சாந்தி,** கோவை.

**12ஆம் வகுப்பு**

4. திரு. **அரு.சோம. சண்முகநாதன் – சிவகாமி,** தூத்துக்குடி.
5. முதல் கல்வி காவலர் நினைவாக கல்விகாவலர். சுப. செல்வம் செட்டியார் ஆனந்தம் ஆச்சி சார்பாக செ.இளவரசன் – விசாலா. நங்கநல்லூர், சென்னை – 61

# புதிய கல்விக்காவலர்கள்

**கல்விக்காவலர்-39**



மேலூருடையார்
தே.மா.சுப்பையா செட்டியார்
சுப. பூங்கோதை ஆச்சி,
பொன்னமராவதி.

**பெற்றோர் : திரு தே. மாணிக்கம் செட்டியார்**
**தேனம்மாள் ஆச்சி**

**பெற்றோருக்கு பெருமை சேர்க்கும் மகள்கள் :**

1. திருமதி. M.மாலதி D. Pharm - திரு. PL. முருகேசன்
   **ஸ்ரீ முருகன் மெடிக்கல்ஸ்,**
   N.G.G.O. காலனி, கோவை-22.
2. திருமதி. S. ஜெயந்தி-திரு. A. சண்முகநாதன்,
   நாகம்மாள் நோட்புக்ஸ், செல்வபுரம், கோவை-26

**கல்விக்காவலர்-40**



திரு S. மாணிக்கம் செட்டியார் -
திருமதி சுசீலா ஆச்சி,
தஞ்சாவூர் .

**கல்விக்காவலர் குடும்பத்தினர்**

பெற்றோர் : தெய்வத்திரு A. சேதுராமன் செட்டியார் –
நலமுடன் திருமதி சரோஜா ஆச்சி.

மகன் – மருமகள் :

திரு. M. அண்ணாமலை – திருமதி. பவித்ரா
பேத்திகள் மஹிரப்பிரியாள் & மிதுரப்பிரியாள்

மகள்–மருமகன் :

திருமதி S. அன்பு பிரியா – திரு S. சரவணன்.
பேத்தி யாஷினி.

**கல்விக்காவலர்-41**



கழுகக்கூருடையார்
**திரு. தேனப்பன் செட்டியார் -**
**திருமதி சந்திரா ஆச்சி**
கோவை.

**கல்விகாவலர் குடும்பத்தினர்**

**பெற்றோர் :** கிருங்காக்கோட்டை கழுகக்கூருடையார்
தே. சொக்கன் செட்டியார்–மீனாட்சி ஆச்சி

**தேனப்பன் செட்டியார் சகோதரர்கள் / சகோதரி :**
பழனியப்பன் செட்டியார், சுப்பையா செட்டியார்,
ஞானம் & சகோதரி அழகு மீனாள் சிவலிங்கம்.
கோவை தேனப்பன்

**சந்திரா ஆச்சி சகோதரர்கள், சகோதரி :**
திரு. காசி அலங்காரம் செட்டியார்,
திரு. தர்மலிங்கம் செட்டியார், திரு. ராமசாமி
செட்டியார், சகோதரி திருமதி சீதாலெட்சுமி ஆச்சி.

**கல்விக்காவலர்-42**



அரும்பாக்கிளையார்
தெய்வத்திரு
**ம.பொ. மாணிக்கம் செட்டியார்**
தெய்வத்திருமதி
**ம.பொ.மா. வேலுமயிலி ஆச்சி**
சிறுகுடி

**கல்விக்காவலர் குடும்பத்தினர்**

**மகன் - மருமகள் :**

திரு. M. சாமிநாதன் - S. பேபிராணி,
திரு. M. கனகராஜ் – K. இளவரசி

**மகள் - மருமகன் :**

அமுதா – சுப்பையா

# எது அறம்? எது சிறந்த அறம்?

பாரத நாடு பழம்பெரும் நாடு. புண்ணிய பூமி. நம் நாட்டில் தோன்றிய அருள் மணக்கும் சமயங்கள் அனைத்துமே நல்வினை தீவினையிலும், அதன் அடிப்படையில் சொர்க்கமும், நரகமும் உண்டு என்பதிலும், மறுபிறப்பிலும் நம்பிக்கை கொண்டவை. நல்லதே செய்தால் நல்லதே கிடைக்கும். வாழும் காலத்தில் புகழோடு வாழ்வார்கள். இவர்கள் வானுறையும் தெய்வத்திற்கு ஒப்பானவர்கள் என்று வள்ளுவர், அறநெறி பிறழாது வாழும் மக்களை போற்றுகிறார்.

**எது அறம்?**

அறம் என்றால் தர்மம், ஈதல், உதவுதல் என்பது மட்டுமல்ல செய்பவர், பெறுபவர் இருவருக்குமே மகிழ்வைத் தரும் செயல்களாக இருந்து, சமூக நலனை ஏற்படுத்துமாயின் அவை அனைத்துமே அறம் எனக் கருதலாம்.

பசிப்போருக்கும், வறியோர்க்கும் உணவு தருவதும், கல்வி கற்பிப்பதும், அதற்கு உதவுவதும், போர்க்காலத்தில் எதிரியைக் கொல்லாமல் யுத்தம் செய்ய முடியும் என்றால் அதனைச் செய்வதும், போரில் காயப்பட்ட வீரர்களை வெளியேற அனுமதிப்பதும், எதிரி சமாதானத்திற்கு வந்தால் ஏற்பதும், அவன் மன்னிப்பு கோரினால் அதனை ஏற்று பகைமை பாராட்டாமல் இருப்பதும் அறம். குடும்ப நலனுக்காக கணவர் மனைவியிடையே விட்டுக்கொடுப்பதும் நல் அறமே. இருவரையும் இரு தரப்பினருக்கும் மன நிம்மதியை தருவதோடு சமூக நலனையும் மேம்படுத்தும்.

**அறம் அறியார் அண்ணல் பாதம்**
**நினையும் திறன் அறியார் – திருமூலர்.**

அறத்தை நினையாதவர்கள் சிவபெருமானுடைய திருவடியை அடைய முடியாது. நரகமே புகுவார்கள் என்பது இதன் பொருளாகும்.

நீத்தாரை நினைவு கொள்ளல், குலதெய்வ வழிபாடு, விருந்தினரை உபசரித்து பரிசளித்தல், சுற்றத்தார்களுக்கு வேண்டிய உதவிகளை பலன் கருதாது தேடிச் சென்று செய்தல்

என பிற நால்வரின் நலம் பேணி, பின்னர் ஐந்தாவதாக தன் நலன் காப்பது அறங்களில் எல்லாம் சிறந்த அறம் என்கிறது குறள். அருவியூர் நகரத்தார் அறவழி நடக்கும் மரபினர். நம்மைக் காப்பது நாம் செய்யும் தர்மம் என்பதை நன்கறிந்தவர்கள். அறவழி நடந்து நல்வாழ்வு பெறுவோம்!

**– S. ஆசை அலங்காரம், தலைவர், அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம்**



## காப்புகட்டு விழா

திண்டுக்கல் கழுகக்கூருடையார் திரு D. ராஜசேகர பாஸ்கரன் செட்டியார் – இளவரசி ஆச்சி இவர்களின் மகன்வழிப் பேரனும், மதுரை திரு மயிலேசன் செட்டியார் – அழகுமீனாள் ஆச்சி இவர்களின் மகள்வழிப் பேரனும் **Dr. R. மௌலீஸ்வரன் M.B.B.S., (அரசு மருத்துவர்) – ராஜி** இவர்களின் மகனுமான **M. அக்சரன்** காப்பு கட்டு விழா 01.06.2022 அன்று திண்டுக்கல் அவர்களது இல்லத்தில் வெகு சிறப்பாக நடைபெற்றது.

**தகவல் : Dr. R. பத்மபிரியா M.B.B.S., திண்டுக்கல்.**

## பழனி மடத்தில் அன்னதானம்



அருவியூர் வடக்குவளவு நகரத்தார் ஆதி சைவ மடத்தில் 15.8.2022 திங்கட்கிழமை அன்று வா. புதூர் திரு மு.மயி. முத்துச்சாமி செட்டியார் வழிகாட்டுதல் அறிவுரையின்படி அன்னாரின் ஐந்து மகன்களும் சேர்ந்து திரு மு. சக்திவேல் அவர்கள் தலைமையில் பூஜைகள் செய்து, வந்திருந்த அன்பர்கள் அனைவருக்கும் முதலாமாண்டாக பழனி முருகப்பெருமானின் அருளாசியுடன் மிகச் சிறப்பாக செய்துள்ளார்கள்.

# யோகாவில் சான்றிதழ் மற்றும் கோப்பை பரிசு



பட்டேல் எஜுகேசனல் ஸ்போர்ட்ஸ் அகடமி சார்பில் திண்டுக்கல் ரோட்டரி ஹாலில் 06.06.2022 அன்று நடைபெற்ற சிறந்த விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகளுக்கு விருதுகள் வழங்கும் விழாவில், திண்டுக்கல் திரு **M. சரவணன் செட்டியார் - சுதா ஆச்சி** இவர்களின் மகள் 10-ம் வகுப்பு படிக்கும் **S. விஷாலி** யோகாவில் State Artistic Gold சான்றிதழும், கோப்பையும் மதுரை மேயர் திருமதி இளமதி ஜோதி பிரகாஷ் அவர்களிடமிருந்து பெற்றுக்கொண்டார்.

**தகவல்: திரு M. சரவணன், திண்டுக்கல்.**

தொடர்ந்து யோகாவில் பல சாதனைகள் நிகழ்த்திவரும் திரு S. விஷாலி அவர்களை மேலும் பல வெற்றிகளைப் பெற வேண்டுமாய் அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம் வாழ்த்துகிறது.

**- கல்வி வளர்ச்சிக் கழக நிர்வாகிகள்**

உ
சிவமயம்

யாவர்க்குமாம் இறைவர்க்கு ஒரு பச்சிலை
யாவர்க்குமாம் பசுவுக்கொரு வாயுறை
யாவர்க்குமாம் உண்ணும் போது ஒருகைப்பிடி
யாவர்க்குமாம் பிறர்க்கு இன்னுரைதானே.

**அரசு மெடிக்கல்ஸ்**
**வெள்ளி விழா கண்ட நிறுவனம்**

**எல்லாவிதமான இங்கிலீஷ் மருந்துகளும் கிடைக்கும்**




**பஸ் ஸ்டாண்டு அருகில், பொன்னமராவதி. போன் : 260657**

ஸ்ரீ மலையாள சாஸ்தா அய்யனார் துணை

தொடக்கம்
2003



குடிப்பட்டம்: மேலூருடையார்
செல்: 89407 22771
பூர்வீகம்: K. புதுப்பட்டி



காசாளர் : அ.ச. அலங்கார குமரன்

# ஸ்ரீ சாஸ்தா
## ஐயங்கார் பேக்கரி

PNS

கடை முகவரி: ஸ்ரீ சாஸ்தா ஐயங்கார் பேக்கரி, மில் ஸ்டாப்,
பல்லடம் ரோடு, கணபதிபாளையம் பிரிவு,
திருப்பூர்–641 605 செல்: 978718 2883

பொன்மொழி : நம்மை உற்சாகப்படுத்தி, மகிழ்ச்சி தந்து எப்போதும் ஆனந்தம், வெற்றி இவைகளைத் தருவது புத்தகம் மட்டுமே!









**உயர்தர இனிப்பு மற்றும் கார வகைகள்,
பிறந்த நாள் கேக் வகைகள்,
ஐஸ்கிரீம், பிரஸ் ஜூஸ், டீ, காபி
இவை அனைத்தும் இங்கு கிடைக்கும்.**

**‘உலக நன்மைகளும்
சுவாரஸ்யமான சிவ ரகசியங்களும்’**
என்ற தலைப்பில் நூல் விரைவில் வெளி வருகின்றது

நூலாசிரியர் : **அ.ச. அலங்கார குமரன்,**
K. புதுப்பட்டி

**நல்வாழ்த்துகளுடன்**

**அ.ச. அலங்கார குமரன்**
மனைவி : **அ. ரேவதி,** L.I.C. Agent
மகன் : **அ. அரவிந்த்** B.E.
மகள் : **அ. கனிஅமுது**

# கல்விக்காவலருக்கு பாராட்டு



38-வது கல்விக்காவலர் அரும்பாக்கிளையார் **திரு V. லட்சுமணன் செட்டியார் - திருமதி பாக்கியலட்சுமி ஆச்சி** கிருங்காக்கோட்டை அவர்கள் ஆலவயலைச் சேர்ந்த, தந்தை இல்லாத, வசதி வாய்ப்பற்ற செல்வி அ. ஜனனி பெற்றோர் வெ. அன்பரசு - அஞ்சுகம், ஆலவயல் என்பாரது கல்லூரி படிப்பு செலவிற்காக ரூ.5000/- வீதம் நன்கொடை அளித்து வந்தார். சென்ற கல்வி ஆண்டில் செல்வி அ. ஜனனி கல்லூரிப் படிப்பை முடித்துள்ளார்.

தற்போது கும்பகோணத்தைச் சேர்ந்த கணவரை இழந்த திருமதி SV. மைதிலி, கல்லூரியில் படிக்கும் தனது மகள் ஸ்ருதி, ஒன்பதாம் வகுப்பு படிக்கும் மகன் சுதன் ஆகியோர்கள் படிப்பதற்கு பண உதவி கோரியதன் பேரில் மேற்படி இருவரின் படிப்பு செலவிற்காக ஆகஸ்ட் 2022 மாதத்தில் ரூ.5000/- நன்கொடை அளித்துள்ளார்.

தந்தையை இழந்து தவிக்கும் ஆதரவற்ற மாணவ மாணவிகளுக்கு கொடை உள்ளத்தோடு, தந்தை ஸ்தானத்தில் இருந்து கல்வி உதவித் தொகை வழங்கி வரும் திரு V. லட்சுமணன் செட்டியார் - பாக்கியலட்சுமி ஆச்சி குடும்பத்தாரை பாராட்டுவதோடு அவர்களுக்கு குறையாத செல்வமும், நீண்ட ஆயுளும், நல்ல உடல் நலமும் அருள எல்லாம் வல்ல அருள்மிகு மங்கைபாகர்-தேனம்மையை பிரார்த்திக்கின்றோம்.

**-திரு செ. ஆசை அலங்காரம், தலைவர்**

---

**கொட்டாம்பட்டியில் ஓர் இனிய உதயம்**
**5.3.2020 முதல் - பேருந்து நிலையம் எதிரில்**



உ

ஸ்ரீ வயிரவ சுவாமி துணை

வாழ்த்துகளுடன்

கடை: 94432 06431
97867 46431

வீடு: 97874 81103

# சிவசக்தி ஸ்டோர்ஸ்




279, அண்ணாசாலை,

**பொன்னமராவதி.**

**மளிகை, ஆயில், ஸ்டேசனரி மற்றும்**
**குளிர்பானங்கள் மொத்தம் & சில்லறை**

# அன்னம் டிரேடர்ஸ்





வடுகநாதன் ரோடு,
KVB பேங்க் அருகில்,
**பொன்னமராவதி.**

ஸ்டாக்கிஸ்ட்:
**நெஸ்டில், மைசூர் சோப்,**
**ராஜம் சுக்கு காபி,**
**பண்ணாரி மைதா.**

# ராநா கெஸ்ட் ஹவுஸ்

KVB பேங்க் அருகில், **பொன்னமராவதி.**

முற்றிலும் குளிரூட்டப்பட்ட (A/C) ரூம்கள்,
சிறிய பெரிய அளவுகளில், நிறைந்த வசதிகளுடன்,
நிறைவான கட்டணத்தில்,
நகரின் மத்தியில் தரமான தங்கும் விடுதி.



# வாசகர் குரல்

**வாசகர் குரல் : 160-1**

**1. திருமதி ஆனந்த செல்வத்திற்கு பாராட்டுதல்**

மன அமைதி கிடைக்க முதலில் பக்தி, பிறகு ஆசைகளை வளர்த்துக் கொள்ளாமலும், புதிய விஷயங்களை தேடிக் கொள்ளாமலும் மனதை தெளிவுபடுத்தி கடவுளிடம் சரணடையுங்கள்.

தீய எண்ணங்களை விட்டு நல்ல எண்ணங்களை நினைத்து, ஐம்புலன்களை அடக்கி மனதை ஒருமைப்படுத்தி கொண்டால் முக்தி அடையலாம். எளிய வழியைத் தெளிவுபடுத்தி மன அமைதி கிடைக்க கடவுளிடம் உடலை ஒப்படையுங்கள் என்று விளக்கி விட்டீர்கள். நன்றி! பாராட்டி மனமார வாழ்த்துகிறோம்.

**2.பெண்களின் சமுதாயத்திற்கு பெருமைத் தேடித் தந்தவர்களை பாராட்டுதல்.**

பெண்களின் எடுத்துக்காட்டுக்கு வழி வகுத்து வரும் எல்லா துறைகளை விட இப்பொழுது மருத்துவத் துறையில் வென்றவர்களை மனதார பாராட்டி வாழ்த்துகிறேன்.

1. நீடாமங்கலம் திரு அ. முருகன் செட்டியார் - திருமதி செல்வமணி ஆச்சி இவர்களின் புதல்வி திரு Dr. அனு சோபியா அவர்களையும்,
2. திண்டுக்கல் திரு சொ. தங்கராசு செட்டியார் - திருமதி சாந்தி ஆச்சி இவர்களின் புதல்வி Dr. ஆஷா அவர்களையும்,
3. புழுதிபட்டி திரு ந. செல்வம் செட்டியார் - திருமதி செ. சிவயோகம் ஆச்சி தம்பதியரின் மகன் க.செ. அசோகன்-அன்புமீனாள் மகள் செல்வி Dr. செ.அ. யோகயாழினி அவர்களையும்
4. கோயம்புத்தூர் திரு செ. மாதவன் செட்டியார் - மா சுசீலா ஆச்சி மகன் செல்வன் Dr. மா. யோகேஷ் அவர்களையும் மனதார பாராட்டி வாழ்த்துகிறேன்.

**- P. சிவன்ஜோதி - S. மல்லிகா குடும்பம், தஞ்சாவூர்.**

**வாசகர் குரல் : 160 - 2**

2022 ஜுலை மாத இதழில் வெளிவந்துள்ள தலைவர்

சிந்தனை கட்டுரை நம் முன்னோர்கள் வாழ்ந்த வாழ்க்கை அருவியூர் பட்டணம் உருவான வரலாறு அது மன்னர்களால் சிதைக்கப்பட்டு மீண்டும் முயற்சி செய்து நமது சமுதாயத்தவர்கள் (நகரத்தை நோக்கி சென்று சிறு தொழில்கள்) வளர்ச்சி அடைந்த விதம் போன்ற அம்சங்களின் கருத்து மிக அருமை. சிறப்பு வாழ்த்துக்கள். அதே நேரத்தில் நாம் வாழ்கின்ற இந்த காலம் என்பது நமது சமுதாயத்தினரின் திருமண வாழ்க்கையில் அபரித எதிர்பார்ப்பின் காரணமாக சமுதாயத்தின் உறுப்பினர் எண்ணிக்கை வளர்ச்சி என்பது வேறு திசையை நோக்கிச் சென்று கொண்டிருக்கிறது என்பதையும் சேர்த்து சுட்டிக்காட்டியிருந்தால் மிகவும் சிறப்பாக இருந்திருக்கும்.

அதே போன்று இந்த இதழின் 44,45-வது பக்கத்தில் திருமணமான பெண் தன் தாய்க்கு எழுதிய கடிதம் மிக அற்புதம். பெண்கள் இயல்பாக படக்கூடிய நிகழ்வுகளை கண்முன் நிறுத்தி உள்ளீர்கள். வாழ்த்துக்கள்!

அதே நேரத்தில் திருமணம் ஆகாத ஆண் பிள்ளை களுக்காக பிள்ளையின் தாய் தந்தையர் பெண் பார்ப்பதற்கு படுகின்ற சிரமம் என்பது சமீபகாலமாக மன உளைச்சலை உண்டாக்குகிறது. சிறிய சிறிய காரணத்திற்காக பெண் வீட்டார் மணமகனை தேர்வு செய்வதில் ஏற்படக்கூடிய சிரமங்களை அடுத்த இதழில் சுட்டிக்காட்ட வேண்டும் என்று விரும்புகிறேன். நன்றி வணக்கம். **– செல்வம், உத்தங்குடி, மதுரை.**

**வாசகர் குரல் : 160-3**

ஜுலை 2022 நகரத்தார் குரலில் அபிராமி கோவை அவர்கள் எழுதியிருந்த 'அஜினோமோட்டோ' பற்றிய கட்டுரையில் கெடுதல் விளைவிக்கக் கூடிய பொருள் என்பது உண்மை. அஜினோமோட்டோ கலந்த உணவை சாப்பிட்ட சிறிது நேரத்தில் வயிற்றுவலி, வயிற்றுப் போக்கு ஏற்படும்.

நகரத்தார் பெருமக்கள் நடத்தும் அனைத்து விஷேச விருந்துகளிலிலும் சமையல் கான்ட்ராக்டர்களிடம் தெரிவித்து ருசிக்காக அஜினோமோட்டோ சேர்ப்பதைத் தவிர்க்கும்படி அறிவுறுத்த வேண்டும். சிறுகுடி மைனர் வெள்ளச்சாமி அவர்கள் எழுதியுள்ள "தகவல் அறியும் உரிமைச் சட்டம்" பற்றிய கட்டுரை மிகவும் பயனுள்ளது. இதன்படி எனக்கு வேண்டிய தகவல்களை ஒரு வெள்ளைத் தாளில் எழுதி, ரூ.10/- மதிப்பிற்குரிய கோர்ட்பீஸ்

ஸ்டாம்ப் ஒட்டி, பதிவுத் தபால் மூலம் அனுப்பியதன் பயனாக நிறைய அலுவலகங்களிடமிருந்து எழுத்துப் பூர்வமான பதிலைப் பெற்றுள்ளேன். சம்பந்தப்பட்ட அலுவலகங்களில் நேரடியாகக் கேட்டால் முறையான பதில் கிடைப்பதில்லை, மேலும் தகவல் தந்தாலும் அது எழுத்துப் பூர்வமாக அமையாது.

திருமதி ரேவதி அவர்கள் எழுதியுள்ள “குழந்தைகளும், குளிர்காலமும்” பற்றிய கட்டுரை தாய்மார்களுக்கு மிகவும் பயனுள்ளது.

கல்வி வளர்ச்சிக் கழகத் தலைவர் திரு S. ஆசை அலங்காரம் அவர்கள் எழுதியுள்ள “திருமணமான பெண் தாய்க்கு எழுதியுள்ள கடிதம்” பற்றிய கட்டுரையும், இந்து சமயம் உருவான விதம் பற்றி திரு அ.ச. அலங்கார குமரன் எழுதியுள்ள கட்டுரையும் மிகவும் அருமை.

அனைத்து நகரத்தார் பெருமக்களும் நமது நகரத்தார் குரலுக்கு படைப்புகளை எழுதி அனுப்பி வைப்பதன் மூலம் உங்களுக்குத் தெரிந்த விஷயத்தை பிறரும் அறிந்து கொள்ள ஏதுவாக அமையும்.

**– V. கணேசன் B.Sc., தலைவர், அ.வ.ந. சங்கம், V. புதூர்.**

**வாசகர் குரல் : 160-4**

குரல் ஜுலை குரல் பக்கம் 44-ல் தாய்க்கு எழுதிய கடிதம் படித்து வளர்ந்து வரும் திருமணமாக உள்ள பெண்கள் இதை திரும்ப திரும்ப படித்தால் ஏன்? எதற்கு? என புரிந்து கொள்ள முடியும். என் குடும்பத்திற்கு மாமியார் மெச்சிய மருமகளாக நடந்து கொள்ள தயாராகி விட்டேன் என்பதும் புரியும். அதே சமயத்தில் வீட்டுக்கு அழைத்து வந்த மருமகளை தன் மகள் போல் நினைத்து அவரது உணர்வு - எண்ணத்திற்கு மாமியார் மாமனார் ஒதுங்கி விட்டுக் கொடுத்து வாழ்ந்தால் குடும்பம் மகிழ்ச்சியுடன் பேரன் பேத்திகளையும் பெற்று கொஞ்சி விளையாடும் பாக்கியத்தையும் பெற முடியும் என்பதும் உணர முடியும்.

சமூக சிந்தனைச் செய்தியாக எழுதியுள்ள தலைவர் திரு செ. ஆசை அலங்காரம் அண்ணன் அவர்களுக்கு நன்றி கூறுகிறேன். **– பி.எல்.ஆர், கோவை.**



# சிவபாதம் சேர்ந்தார்



வருமுறைப் பிறவி வெள்ளம், வரம்பு காணாது அழுந்தி
உரு எனும் துயரக் கூட்டில், உணர்வின்றி மயங்குவார்கள்
ஒரு மனதுடன் சேவித்து, முன்செலும் சிறப்பினாலே
மருவிய பிறவி நீங்க, மன்னு சிவசோதியில் புகுந்தார்.

– திருமுறை



பிரான்மலை அ.வ.ந. சங்கத்தின் முன்னாள் துணைத் தலைவரும், சிங்கம்புணரி திரு விசுவநாதன் செட்டியார் அவர்களின் மனைவியுமான திருமதி **வி. செல்வ ரோஜா** 21.06.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

**தகவல் : வாட்ஸ்அப் செய்தி**

---

பூர்வீகம் சொக்கம்பட்டி – திருப்புவனம் தெய்வத்திரு முத்துப்பழனிச் செட்டியார் அவர்களது துணைவியாரும், திருவாளர்கள் M. ராஜேந்திரன், M. பூமிநாதன் இவர்களது தாயாருமான திருமதி **M. சிவஜோதி ஆச்சி** அவர்கள் 5.07.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

**தகவல் : வாட்ஸ்அப் செய்தி**

---



சிறுகுடி கோட்டைவளவு இல்லத்தைச் சார்ந்த திரு **S. சிவஞானம் செட்டியார்** அவர்கள் (வயது 64) 25.07.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

**தகவல் : வாட்ஸ்அப் செய்தி**

---

கம்பிளியம்பட்டியைச் சார்ந்த திரு ஊமைத்துரை செட்டியார் மகன் திரு **ஊ. ராமமூர்த்தி செட்டியார்** 5.08.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

**தகவல் : வாட்ஸ்அப் செய்தி**

---



கோவை கணபதி மயிலா மெடிக்கல் திரு **ஆ. நாகராஜன்** (S. புதூர் – ஆறுமுகம் செட்டியார் மீனாம்பாள் ஆச்சி புதல்வர்) அவர்கள் 7.8.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

**தகவல் : திரு செந்தில் செல்வம், கோவை.**

---







புழுதிபட்டி திரு கணேசன் செட்டியார் அவர்களது மகனும், திருமதி மலர்ச்செல்வி ஆச்சி அவர்களின் கணவருமான திரு. **முத்து ரத்தினம்** 08.08.2022 திங்கள் அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

**தகவல் : திரு கா. முத்துக்கருப்பன், இளைஞர் பேரவை, பொன்னமராவதி.**



கோவை அ.வ.ந. சங்கத்தின் அறங்காவலர் திரு **தேனிமலை நாகப்பன்** அவர்கள் 9.08.2022 புதன்கிழமை அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

**தகவல் : திரு A.P. ஸேதுராமன், இணைத்தலைவர், அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம்.**

**இரங்கல்பா**

தானென்ற எண்ணத்தில்
தலைக்கனமும் இல்லாமல்
தேனீயைப்போல் உழைத்திட்டார் 'தேனப்பர்' நம்மவர்க்கே
வானெட்டும் புகழோடு வாழ்ந்தின்று மறைந்தாரே1
கானகமும் ஒன்றாகிக் கண்ணீரைத் சிந்திடவே!

**– கோவை கு. கணேசன்.**



சென்னை திரு ரா. பிரபாகர் மற்றும் திருமதி ஜெயலட்சுமி கணேசன், ஆலவயல் திரு ரா. செல்வம் செட்டியார் இவர்களது தந்தை திரு **ராஜ மாணிக்கம் செட்டியார்** (வயது 83) 16.08.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

**தகவல் : திரு R. செல்வம் செட்டியார், ஆலவயல்**



படமிஞ்சி – உலகம்பட்டி திரு **மயி. சுப்பிரமணியன் செட்டியார்** (கோவை – பாப்பநாயக்கன் பாளையம், அன்னை மெடிக்கல் திரு சக்திவேல் செட்டியார் அவர்கள் தகப்பனார்) 18.08.2022 அன்று இறைவனடி சேர்ந்தார்கள்.

தகவல் : வாட்ஸ்அப் செய்தி

தங்களது உறவுகளை இழந்து தவிக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த இரங்கலையும், வருத்தத்தையும் தெரிவித்துக் கொள்வதோடு இறைவனடி சேர்ந்தோர்களின் ஆன்மா சாந்தி அடைய வேண்டுகிறோம். – குரல் நிர்வாகம்

# அருவியூர்த் தந்தை
# தெய்வத்திரு நல்ல சுப்பையா அவர்களுக்கு
# 28-ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி



தோற்றம்
09-07-1928

மறைவு
08-08-1995

தன்னலம் கருதாது, சமுதாய நலம் பேணிக் காத்த பெருந்தகையாளர், நமது சமுதாயத்தின் ஆற்றல்மிகு செயல்வீரர், மாண்பாளர். பொன்னமராவதி அ.வ.ந.. சங்கத் தலைவராக 13 ஆண்டுகளும், அருவியூர் வடக்குவளவு நகரத்தார்கள் பொதுநலச் சங்கத் தலைவராக 19 ஆண்டுகளும், பணியாற்றிய பெருமைக்குரியவர்.

**திரு நல்லசுப்பையா அவர்கள் ஆற்றிய சமூகப் பணிகள் :**

★ 1976-இல் மங்கல வாழ்த்துக் கல்வெட்டு

★ 1978-ம் ஆண்டு முதல் மாணவர்கட்கு பரிசு, திருமண உதவித் திட்டம். பிரான்மலை அ.வ.ந. பொதுநலச்சங்க நகர விடுதியில் மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி கட்டி முடித்தல்.

★ சிங்கம்புணரி மனையிடம் போராடி மீட்டெடுப்பு.

★ 1977 சேமிப்புத் திட்டம் தொடக்கம். பழனிமடம் நிர்வாகம் ஏற்றல்.

★ 1982 கல்வி வளர்ச்சி கழகம் தோற்றுவித்தல்.

★ 1983 சிங்கம்புணரியில் அருவியூரார் அங்காடி கட்டுதல்.

★ 1984 நமது குருக்கள் வசித்த வீடு திருமண மண்டபமாக மாற்றி அமைத்தல். பிரான்மலை அடையவஞ்சான் ஊருணியை ஊராட்சி யிடமிருந்து மீட்டெடுத்தது. மடத்தில் குளியலறை, கழிவறை கட்டியது. பல ஊர்களில் இருந்த பொதுச் சொத்துக்களை அ.வ.ந. பொதுநசலச் சங்கம் பெயருக்கு கொண்டு வந்து சாதனை புரிந்த பெருமைக்குரியவர். 1992-ம் ஆண்டு அனைத்து அருவியூர் வடக்குவளவு நகரத்தார்களின் பண உதவி மற்றும் பங்களிப்புடனும், ஒத்துழைப்புடனும் பிரான்மலை மங்கைபாகர்-தேனம்மை ராஜகோபுரம் அமைத்து திருக்குட முழுக்கு விழா (20-04-1992)-ல் (மேற்கண்ட அனைத்தும் உயர்திரு மு.ந. இராமநாதன் செட்டியார் அவர்களுடனும், தெய்வத்திரு ம.பொ.சி. மணிக்காளைச் செட்டியார் அவர்களுடனும் இணைந்து மூன்று முறைக்கு மேல் ஒற்றுமை உணர்வோடு நடத்திய பெருமைக்குரியவர்.

– **அருவியூர் வடக்குவளவு நகரத்தார், கல்வி வளர்ச்சிக் கழகம்.**

# திரு மு. தேனிமலை நாகப்பன் அவர்களுக்கு புகழஞ்சலி



கோவை அ.வ.ந. சங்கத்தின் நீண்ட நாள் உறுப்பினரும், அறங்காவலருமான திரு மு. தேனிமலை நாகப்பன் செட்டியார் அவர்கள் 9.8.22 அன்று இறைவனடி சேர்ந்தார். கோவை சங்கத்தின் சார்பில் பேரூர் தண்டாயுதபாணி சுவாமிக்கு நமது நகரத்தார் பெருமக்கள் நலமுடன் வாழ அபிஷேகம் மற்றும் அலங்காரம் செய்து 185 மாதமாக பிரார்த்தனை செய்யப்பட்டு வருகிறது. இதனை முன்னின்று நடத்தியவர் திரு தேனிமலை நாகப்பன் செட்டியார் அவர்கள்.

மேலும் இவர் ஒவ்வொரு மாதமும் வளர்பிறை சஷ்டி அன்று பழனியில் நம் மடத்தில் நடைபெறும் பூஜை மற்றும் அன்னதானத்திலும் தவறாமல் கலந்து கொண்டு தன்னுடைய பணிகளை சிறப்பாக செய்து வந்தார். அறங்காவலராக இவர் கோவை அ.வ.ந. சங்கத்திற்கு ஆற்றிய பணிகள் சிறப்பு வாய்ந்தது. பேரூர் பட்டீஸ்வரர் கோவிலில் ஆண்டுதோறும் நடைபெறும் தேரோட்டத்தின் பொழுது பக்தர்களுக்கு பாணகம், நீர் மோர் பந்தல் அமைத்து முன்னின்று ஆன்மீகப் பணியை தவறாது செய்தவர். கோவை அ.வ.ந. சங்க ஆண்டுவிழாவிற்கு வேண்டிய ஏற்பாடுகள் அனைத்தையும் மிகச் சிறப்பாகச் செய்தவர். மற்றும் நமது சமூகத்தவர் பேரூர் கோவில் சம்பந்தமாக என்ன வேலை சொன்னாலும் சிரமம் பாராமல் செய்து கொடுத்தவர். அன்னாரது இழப்பு அவரது குடும்பத்திறகு மட்டுமல்லாமல் நமது கோவை சங்கத்திற்கும் மிகப்பெரிய இழப்பாகும்.


அன்னாரது ஆன்மா இறைவன் திருவடியில் இளைப்பாற பிரார்த்திக்கின்றோம்.

இங்ஙனம்

**கோவை அ.வ.ந. சங்கம், இளைஞர் பேரவை, மகளிர் சங்கம்**

**மற்றும் கோவை கல்வி வளர்ச்சிக் கழகம்.**

# சேவைச் செம்மல், அறங்காவலர் திரு மு. தேனிமலை நாகப்பன் அவர்களுக்கு கண்ணீர் அஞ்சலி



திரு மு. தேனிமலை நாகப்பன் அவர்கள் உடல்நிலை குறித்து கோவை நகர நமது சங்க பொறுப்பாளர்களை தொடர்பு கொண்டு பேசிய போது திரு மு. தேனிமலை நாகப்பன் அவர்களை மருத்துவமனையில் அவசர சிகிச்சைப் பிரிவில் சேர்த்து சிகிச்சை அளித்து வருவதாக தெரிவித்தது அறிந்து என் மனம் அமைதியானது. இறைவனை வேண்டினேன்.

மூதுரை நூல் - 20 விளக்க உரைப்படி உடலில் தோன்றிய நோயே அதனைக் கொல்லும். உறவினர்கள், சுற்றத்தார்கள் அருகில் இல்லையே என வருந்த வேண்டாம். பெரிய மலையிலுள்ள மூலிகையே மருந்தாக பயன்பட்டு பிணி தீர்க்கும். அம்மருந்து போல் தக்க தருணத்தில் சங்க நிர்வாகிகள் உதவி புரிந்து நோய் தீர்க்க முயற்சி செய்தார்கள்.

09.8.2022 அன்று இறைவனடி சேர்ந்த (பொன்னமராவதி) பேரூர் மு. தேனிமலை நாகப்பன் அவர்கள் நற்குணம், நல்ல எண்ணம், நற்செயல், எளிமை, பணிவு தொண்டு உள்ளம் உடையவர். இவரின் சமூக வளர்ச்சிக்காக பிரதி மாதமும் பேரூர் முருகன் கோவில் அபிஷேக ஆராதனை, அன்னதானமும், சஷ்டி விரதத்துக்கு பழநி மடத்தில் முருகப் பெருமான் அபிஷேக அன்னதானமும் நடக்க சேவைப் பணியில் சுமார் இருபது வருடங்களாக பணி செய்தவர். இவரின் சேவையைப் பாராட்டி கோவை சங்கத்தால் அறங்காவலர் பட்டம் வழங்கப்பட்டவர். இவரின் வம்சம் வாரிசுகள் விருத்தியாகும்.

இவரின் பெயர் என்றும் நிலைத்து நிற்கவும் மற்றும் இவரின் ஆன்மா சாந்தி அடையவும் அனைவரும் இறைவனை வேண்டி வணங்குவோம்.

**– சமூகச் சேவகன் பி.எல்.ஆர், கோவை**

# வங்கிப்பணியில் நம்மவர்



பணப்பாக்குமூருடையார் குளத்துப்பட்டி திரு மா. சேது ராஜன் செட்டியார் – சித்ரா ஆச்சி தம்பதியரின் மகன் அன்பரசன் MSc., இன்ஸ்டிடியுட் ஆப் பேங்கிங் பெர்சனல் PO 2021 தேர்வில் தேர்ச்சி பெற்று 30.06.2022 அன்று திருச்சி இந்தியன் வங்கியில் உதவி மேலாளராக பணியில் சேர்ந்துள்ளார். இவர் B.Sc.,Maths திருச்சி நேஷனல் கல்லூரியிலும், M.Sc., Maths காசர்கோடு சென்ட்ரல் யுனிவர்சிட்டி ஆப் கேரளாவிலும் படித்துள்ளார். **தகவல் : அன்பரசன், குளத்துப்பட்டி.**

இந்தியன் வங்கியில் உதவி மேலாளராகப் பணியில் சேர்ந்து, நம் சமுதாயத்திற்கும், தங்களின் பெற்றோருக்கும் பெருமை சேர்த்த, செல்வன் அன்பரசன் M.Sc., அவர்களை பாராட்டுவதில் அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம் மட்டற்ற மகிழ்ச்சி அடைகிறது. இவர் மேலும் பல வங்கித் தேர்வுகளில் தேர்ச்சி பெற்று பல உயர் பதவிகளை அடைந்து சரித்திரம் படைக்க வாழ்த்துகிறோம்.

**– கல்வி வளர்ச்சிக் கழக நிர்வாகம்**


உ
சிவமயம்

உடல் நலம் பேணுவோம்! உளம் மகிழ வாழ்வோம் !!

**கார்த்திக் மெடிக்கல்ஸ்**

காந்திபார்க், கோவை

**காமாட்சி பார்மஸி**

சுக்ரவார்பேட்டை, கோவை



செல் : 95144 52521



எல்லாவிதமான இங்கிலீஸ் மருந்துகளும் கிடைக்கும்

S. கிருஷ்ணசாமி
K. பானுமதி

K. மீனாட்சி B.E.
K. மோகனசுந்தரி B.E.
K. கார்த்திக் B.Sc.,

# சிலம்பம் போட்டியில் வெற்றிவாகை சூடிய நம்மவர்



கோவை திரு **மா. கதிரேசன் செட்டியார்– K.S. நாகராணி** இவர்களின் (பூர்வீகம் பொய்யமணிப்பட்டி–நாவலூருடையார்) 7–ம் வகுப்பு படிக்கும் மகள் **K. குஷி** கடந்த 30.7.2022 அன்று திருவண்ணாமலை மாவட்டம் ஆரணி Orange British Academy Senior Secondary School (CBSE)–ல் நடைபெற்ற மாநில அளவிலான சிலம்பம் போட்டியில் பங்கு பெற்று இரண்டாம் இடம் பெற்றுள்ளார்.

மாநில அளவில் நடைபெற்ற சிலம்பம் போட்டியில் இரண்டாம் பரிசு பெற்ற K. குஷியை, மென்மேலும் பல வெற்றிகளைக் குவிக்க அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம் வாழ்த்துகிறது. **– கல்வி வளர்ச்சிக் கழக நிர்வாகிகள்**

உ

ஸ்ரீ வாத்தியார் ஐயா துணை ஸ்ரீ நாகம்மாள் துணை ஸ்ரீ சேவுகமூர்த்தி துணை

**உரிமை : S. நாகராஜ், R. சேகர்**






**ஸ்ரீ நாகா கூல்கேர் & டிராவல்ஸ்**

**Sri Naga Cool & Travels**

சிறுவர் பூங்கா அருகில், சிங்கம்புணரி - 630 502

**கார் வாடகைக்கு கிடைக்கும்**

**98940 71382, 78268 79248**



அனைத்து முன்னனி நிறுவனங்களின்
A/C, Fridge, Washing machine, water Heater,
சிறந்த முறையில் பழுது நீக்கித் தரப்படும்








# தாய்க்கு நிகரானவள் தாரம்

– திரு சொ. வைத்திலிங்கம், மதுரை.

எழுபத்து ஐந்து வயதாகும் ஒரு கணவர் தமது மனைவியின் மறைவிற்குப் பின் எழுதும் வரிகள் :

- எழுபத்து ஐந்து வயதில்... ஆதரவு இன்றி நிக்குது மனசு...
- நாற்பத்தைந்து வருடம் – ஒரு நாளாவது அவளை கொண்டாடி இருக்கலாம்...
- என் கோபத்தை தள்ளுபடி செய்து ஒரு நாளாவது அவளை கொண்டாடி இருக்கலாம்...
- அவள் சமையலை ஒரு முறையாவது நான் மனம் நிறைய பாராட்டி இருக்கலாம்...
- ஒரு நாளாவது நான் சமையல் செய்து அவளுக்கு ஊட்டி இருக்கலாம்...
- ஒரு நாளாவது அவளுக்கு பதில் நான் அவளது துணியையும் சேர்த்து துவைத்து இருக்கலாம்..
- ஒரு நாளாவது TVயையும் Mobileயும் அணைத்து விட்டு அவளை கொஞ்சி இருக்கலாம்..
- ஒரு நாளாவது வேலை தளத்தின் கோபத்தையும், எரிச்சலையும் அங்கேயே விட்டுவிட்டு வந்து இருக்கலாம்..
- ஒரு நாளாவது என் விடுமுறை நாட்களில் அவளை வெளியில் அழைத்துச் சென்று இருக்கலாம்...
- ஊர் ஊராய் சுற்றி அவளை உற்சாகப்படுத்தி இருக்கலாம்...
- அவள் விரும்பி கேட்காத போதும், ஒரு புடவை வாங்கி கொடுத்து இருக்கலாம்...
- ஒரு நாளாவது காலையில் அலாரத்தை கொஞ்சம் அணைத்து வைத்து அவளை தூங்க விட்டு இருக்கலாம்...
- ஒரு மாசமாவது என் முழு சம்பளப் பணத்தை அவளிடமே கொடுத்து இருக்கலாம்..
- நீ சாப்பிட்டாயா என்று அவளை ஒரு நாளாவது கேட்டு இருக்கலாம்...
- நீயும் வா என்னுடன் வந்து சாப்பிடு என்று ஒரு நாளாவது சொல்லி இருக்கலாம்...

- அவள் உடல் நலத்தைப் பற்றி ஒரு முறையாவது விசாரித்து இருக்கலாம்...
- அவள் தன்னை கவனிப்பதை விடுத்து பிள்ளைகளை மட்டும் கவனிப்பதை கண்டு நான் கொஞ்சம் அவளை கவனித்து இருக்கலாம்..
- அவள் நோயில் விழுந்த போது நான் கடன்பட்டேனும் அவளைக் காப்பாற்றி இருக்கலாம்...
- என் தாயே தாரமே - நீ என்னுடன் இருந்த போது நான் கம்பீரமாய் வாழ்ந்தேன்... நீ என்னை விட்டு போனதும் நான் பல முறை கால் தடுக்கி விழுகிறேன்...
- என்னை தூக்கி விடவும் மூத்தவனுக்கு நேரம் இல்லை...
  தேனீர் ஏதாவது போட்டுத்தரக் கேட்டால் இளைவளுக்கு சினம் வருது...
- என் மனைவியே உன்னை நான் தினமும் கொண்டாடி இருக்க வேண்டும்.
- நான் தவறுகள் இழைத்ததற்கு என்னை நீ மன்னித்து விடு...
- மூச்சு இழந்த-உன் புகைப்படத்துக்கு தினம் தினம் முத்தமிட்டு உன்னிடம் மன்னிப்பு கேட்கிறேன்....
- மீண்டும் ஒரு பிறப்பு இருக்கும் என்றால் நீயே என் மனைவியாய் வந்து விடு நான் உன்னை கொண்டாட வேண்டும்...
- எழுபத்தைந்து வயதில்... இந்த நிலை யாருக்கும் வராமலிருக்க...
- உங்கள் மனைவியை தினமும் நீங்கள் நேசியுங்கள்..
- வாழ்க்கை வசந்தமாகும்...

**தாய்க்குப் பின் தாரம் என்பதல்ல தாய்க்கு நிகரானவள் தான் தாரம்** என்பதை மறந்து விடாதீர்கள்...

## இவ்வாறு வாழ வேண்டும்

உன்னால் சிரித்தவர் ஆயிரம் பேர் இருக்கலாம்.
ஆனால் உன்னால் அழுதவர் ஒருவரும் இருக்கக் கூடாது.
உன்னால் வாழ்ந்தவர் இருக்கலாம்.
ஆனால் உன்னால் வீழ்ந்தவர் இருக்கக்கூடாது.
உன்னால் உயர்ந்தவர் இருக்கலாம்.
ஆனால் உன்னால் தாழ்ந்தவர் இருக்கக்கூடாது.
உன்னால் பசியாறியவர் இருக்கலாம்.
ஆனால் உன்னால் ஒருவரும் பட்டினியாய் இருக்கக் கூடாது.

**- G. மைனர் வெள்ளைச்சாமி B.L., சிறுகுடி**

# இ சேவை மையம் தொடங்குவது எப்படி




தற்போது தமிழக அரசால் வழங்கப்படும் சேவைகள் பெரும்பாலும் இணையதளம் மூலமாகவே வழங்கப்படுகிறது. அதில் வருவாய்துறை சான்றிதழ்கள் உட்பட சில சேவைகள் மக்கள் நேரடியாக தங்களுக்கான உள்நுழைவு ஐடியை குடிமக்கள் போர்டலில் பதிவு செய்து கொண்டு பெற முடியும். மற்ற சேவைகள் அனைத்தும் இசேவை மையங்கள் மூலமாகவே வழங்கப்படுகிறது.

**இ சேவை மையங்கள் எவ்வாறு அழைக்கப்படுகின்றன?**

இ சேவை மையத்தை நடத்த சிறிது கணினி அறிவும், தமிழ் ஆங்கிலம் டைப்பிங் தெரிந்தாலே போதுமானது. போதிய இட வசதியை ஏற்படுத்திக் கொள்ள வேண்டும். ஆர்வமும் திறமையும் இருந்தால் சிறப்பாகச் செயல்பட்டு நல்ல வருமானம் ஈட்டலாம்.

**இசேவை மையத்தை தொடங்கும் வழிமுறைகள் யாவை?**

இசேவை மையங்களைத் தொடங்க கீழ்க்கண்ட படிகள் உள்ளன. முழுமையாகப் படிக்கவும்.

1. முதலில் இ சேவை மையத்தை ஆரம்பிக்க தேவையான கீழ்க்கண்ட உப கரணங்களை வாங்கிக் கொள்ளவும். கணினி, ஸ்கேனர், பிரிண்டர், பயோமெட்ரிக் கருவி, வெப் கேமரா, இணையவசதி, கண்காணிப்பு கேமரா.
2. சிட்டா/பட்டா, வில்லங்க சான்று போன்ற பல சேவைகள் வழங்க எந்தவொரு ஐடியையும் பெற அவசியம் இல்லை. அவற்றை முதலில் தங்கள் மையத்தில் வழங்கலாம்.
3. தங்கள் மையத்தில் கூடுதல் சேவைகளை வழங்க அந்தந்த சேவைகளை வழங்கும் நிறுவனங்களிடமிருந்து ஐடியை விண்ணப்பித்துப் பெற வேண்டும். உதாரணமாக டிஜிட்டல் சேவா ஐடி, இ சேவை ஐடி, இடிஸ்டிரிக்ட் ஐடி etc., பொதுவாக மத்திய அரசால் வழங்கப்படும் சேவைகள் டிஜிட்டல் சேவா

ஐடி மூலமும், மாநில அரசால் வழங்கப்படும் சேவைகள் இ சேவை ஐடி மூலமும் வழங்கப்படும்.

4. தனியர் இரண்டு வழிகளில் மின் ஆளுமை முகமையின் இ சேவை ஐடியைப் பெற முடியும்.
5. ஒன்று கேபிள் டிவி நிறுவனத்தின் மூலம் ஒப்பந்த அடிப்படையில் மின் ஆளுமை முகமையின் இசேவை ஐடியை நேரடியாகப் பெற முடியும். இந்த ஐடியைப் பெற மாவட்ட கேபிள் டிவி நிறுவனத்தை தொடர்பு கொள்ள வேண்டும்.
6. இரண்டு மத்திய அரசின் கீழ் இயங்கும் CSC e-Governance அல்லது CSCSPV நிறுவனத்தின் மூலம் கிராம தொழில் முனைவோர் டிஜிட்டல் சேவா ஐடியை பதிவு செய்து பெற முடியும். சிறப்பாகச் செயல்படும் கிராம தொழில் முனைவோர்களுக்கு இந்த நிறுவனத்தின் மூலமாகவே மின் ஆளுமை முகமையின் இச்சேவை ஐடி பெற்று கிராம தொழில் முனைவோர்களுக்கு வழங்கப்படும். இது தொடர்பான தகவல்களுக்கு இந்த நிறுவனத்தின் மாவட்ட ஒருங்கிணைப்பாளர்களை தொடர்பு கொள்ளலாம். (அவர்களின் தொடர்பு எண்கள் அந்த இணையதளத்திலேயே கொடுக்கப்பட்டிருக்கும்) அல்லது டிஜிட்டல் சேவா ஐடியை விண்ணப்பித்த பிறகு அவர்களே கள ஆய்வு மேற்கொள்ள மையத்திற்கு வருவார்கள். அப்போது தொடர்பு கொள்ளலாம்.

**TNeGA இ சேவை ஐடி பெற எவ்வளவு நாள் ஆகும்?**

மேலே குறிப்பிடப்பட்ட ஐடிகளைப் பெற குறைந்தது ஆறு மாதங்களாவது ஆகும். ஆகவே பொறுமை மிக அவசியம். சேவை மைய முகவர்களுக்கேற்ப காலம் மாறுபடும். GSCSPV ஐடி பெற முதலில் டிஜிட்டல் சேவா ஐடியைப் பெற்று சிறப்பாக செயல்படவேண்டும். அதன் பின்னரே பரிந்துரைக்கப்படுவீர். கேபிள் டிவி ஐடியைப் பெற விண்ணப்பத்துடன் வைப்பு தொகை செலுத்த வேண்டும். பரிந்துரை செய்யப்பட்ட மையங்கள் கள ஆய்வு செய்யப்பட்டு தகுதி வாய்ந்த மையங்களுக்கு ஐடி வழங்கப்படும்.

**TNeGA இசேவை ஐடி பெற கட்டணம் செலுத்த வேண்டுமா?**

இல்லை. TNeGA இசேவை ஐடி பெற கட்டணம் ஏதும் செலுத்த தேவையில்லை. ஐடியை இலவசமாகவே பெறலாம். கேபிள் டிவி ஐடியைப் பெறுவதற்கு மட்டும் குறிப்பிட்ட வைப்பு தொகை செலுத்த வேண்டும். அந்த வைப்புத் தொகையானது ஒப்பந்தம் முடிந்தபின்பு திரும்ப வழங்கப்படும்.

**அனைத்து இசேவைகளை வழங்க TNeGA இசேவை ஐடி கட்டாயமா?**

இல்லை. மின் கட்டணம் செலுத்துதல், பத்திர பதவு சேவைகள், டிக்கெட்ட புக்கிங் etc... போன்ற சேவைகளை வழங்க அந்தந்த இணையதளத்திலேயே ஐடியைப் பதிவு செய்து பெற்றுக் கொள்ளலாம். சிட்டா / பட்டா, வில்லங்க சான்று போன்ற பல சேவைகள் வழங்க எந்தவொரு ஐடியையும் பெற அவசியம் இல்லை. டிஜிட்டல் சேவா ஐடி இந்தால், மத்திய அரசின் பல திட்டங்கள் உட்பட நூறுக்கும் மேற்பட்ட சேவைகளை பொது மக்களுக்கு வழங்க முடியும்.

**டிஜிட்டல் சேவா ஐடி மூலம் என்னென்ன சேவைகள் வழங்க முடியும்?**

பயிர் காப்பிடு பிரிமியம் செலுத்துதல் ( PMFGY)

ஓய்வூதியம் விண்ணப்பித்தல் ( PMSYM )

இலவச டிஜிட்டல் கல்வி வழங்குதல் (PMGDISHA)

மின் கட்டணம் செலுத்துதல்

டிக்கெட் புக்கிங் ( Flight/Train/Bus/Darshan)

பான்கார்டு ( PAN card ) விண்ணப்பித்தல்

வாக்காளர் அட்டை பெயர் சேர்த்தல், நீக்கம் விவரங்களை திருத்தம் செய்தல் ஆதார் சேவைகள், பாஸ்போர்ட் (Passport) விண்ணப்பித்தல், மொபைல் / DTH ரீச்சார்ஜ் LED பல்வு வழங்குதல், ஓய்வூதியதாரர்களுக்கு உயிர் சான்றிதழ் வழங்குதல், பாஸ்ட் டேக் (FAST TAG) பைக்/கார் வாகனங்களுக்கு காப்பீடு வழங்குதல், மருத்துவ சேவைகள், ஆயுள் காப்பீடு பணம் செலுத்துதல், திறன் வளர்ப்பு பயிற்சி அளித்தல், தொலைதூரக் கல்வி (Tele Education) வழங்குதல், தொலைதூர மருத்துவம் (Tele Medicine) வழங்குதல்,

DigiPay மூலம் பண பரிமாற்றம், வங்கி சேவைகள் (Bank correspondece)

**மேலும் பல சேவைகள்**

TNeGA இ சேவை ஐடி மூலம் என்னென்ன சேவைகள் வழங்க முடியும்? வருவாய்துறை சான்றிதழ்கள், திருமண உதவித்தொகை, குழந்தை பாதுகாப்புத் திட்டம். இணையவழி பட்டா மாற்றம் தற்காலிக பட்டாசு உரிமம், பட்டா/சிட்டா/ புலப்படம், குடும்ப அட்டை திருத்தங்கள் காவல்துறை சேவைகள் (CSR/FIR Status, Lost Document Report etc.)
போக்குவரத்துத் துறை சேவைகள் (LLR Application)
பத்திர பதிவுத்துறை சேவைகள் (Online appointment for marriage / Document registration)
தீ மற்றும் மீட்பு துறை சேவைகள்
பிறப்பு இறப்பு சான்றிதழ் அச்சிடுதல்
மாநகராட்சி / நகராட்சி குடிநீர் / சொத்து / தொழில் வரி செலுத்துதல்
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை சேவைகள் (Registration and Renewal) சுகாதரத்துறை சேவைகள் (மருந்து கடை உரிமம் விண்ணப்பித்தல்)
மீன்வளத்துறை சேவைகள் (Relief assistance during Fising Ban Period)

**TNeGA இசேவை ஐடிக்கு விண்ணப்பிக்கும் பொழுது நினைவில் கொள்ள வேண்டியவை என்ன?**

மையத்தின் முகவரி, மையத்தை இயக்குபவர் (CSC operator) விவரம் மற்றும் குறிப்பாக தங்கள் மையம் அமைந்துள்ள இடம் கிராம ஊராட்சியில் உள்ளதா அல்லது பேரூராட்சியில் உள்ளதா அல்லது நகராட்சியில் உள்ளதா என்பதை தெளிவாக குறிப்பிட வேண்டும். ஏனெனில் பின்பு அந்த விவரங்களை மாற்ற இயலாது.

**TNeGA இசேவை ஐடி பெற்று பின்பு என்ன செய்ய வேண்டும்?**

TNeGA இசேவை ஐடி பெற்று பின்பு, பயோமெட்ரிக் உள்நுழைவு செய்ய ஏதுவாக தங்கள் ஐடியுடன் ஆதார் விவரங்கள் பதிவு செய்யப்படும். பின்பு இச்சேவைகளை மேற்கொள்ள தேவையான பயிற்சிகள் வழங்கப்படும். தங்கள் மையத்தில் அரசு இசேவை மையம் என பெயர் பலகை, சேவைகள் மற்றும் அரசு நிர்ணயித்த சேவை கட்டணங்கள் மற்றும் புகார் எண்கள் அடங்கிய பலகை வைக்கப்பட வேண்டும். அதன்பின் தங்கள் மையத்தின் இச்சேவைகளை பொது மக்களுக்கு வழங்கலாம்.

**– M. வினோத் குமார் M.B.A., ரத்தினபுரி, கோவை.**

# வேளாண் துறையில் சாதனை படைக்கும் நம்மவர்



சிவகங்கை மாவட்டம், S. புதூர் ஒன்றியம், S. புதூர் கிராமத்தைச் சேர்ந்த தெய்வத்திரு மயி. அண்ணாமலை செட்டியார் அவர்களின் பேரனும், திரு. அண. சுப்பையா செட்டியார் – தெய்வத்திரு குஞ்சரம் ஆச்சி அவர்களின் மூத்த மகனுமான முனைவர் அ.சு. மயிலப்பா அவர்கள், தற்போது மத்திய அரசின் நேரடி கட்டுப்பாட்டில் உள்ள இம்பாலை (மணிப்பூர்) தலைமையிடமாகக் கொண்ட மத்திய வேளாண்மை பல்கலைக் கழகத்தின் கட்டுப்பாட்டில் அருணாச்சல பிரதேசத்தின் பாசிகாட்டில் செயல்படும் தோட்டக்கலை மற்றும் வனவியல் கல்லூரியில் பேராசிரியராகப் பணிபுரிந்து வருகிறார். S. புதூர் கிராமத்தின் அரசுப் பள்ளியில் இவர் பத்தாம் வகுப்பு வரை பயின்று 1990ஆம் ஆண்டு நடைபெற்ற பத்தாம் வகுப்பு பொதுத்தேர்வில் பள்ளியிலேயே முதல் மாணவராக 88.4% மதிப்பெண் பெற்று சிறந்த மாணவராக தேர்ச்சி பெற்றவர். அருப்புக்கோட்டை மாவட்டம் கல்லூரணியில் இருக்கும் S.B.K. நாடார் மேல்நிலைப் பள்ளியில் 1992ல் பன்னிரெண்டாம் வகுப்பில் 87.6% மதிப்பெண் பெற்று பள்ளியிலேயே முதல் மாணவராகவும் கடந்த பத்தாண்டுகளில் அதிக மதிப்பெண் பெற்ற சாதனைக்குரியவர் ஆவார்.

வேளாண் பட்டப் படிப்பை தேர்வு செய்த இவர் மதுரை வேளாண்மை கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையத்தில் 83.2% மதிப்பெண் பெற்று இளநிலை வேளாண் பட்டப்படிப்பை முடித்தவர்.

தேசிய அளவிலான முதுநிலை படிப்பிற்கான போட்டித் தேர்வில் ஐந்தாவது இடத்தைப் பிடித்த இவர் ICAR - Junior Research Fellowship உடன் பெங்களூரு University of Agricultural Scienceல் மண் அறிவியல் மற்றும் வேளாண் வேதியியல் துறையில் முதுநிலை பட்டப் படிப்பில் 90% மதிப்பெண்ணுடன் தங்கப் பதக்கம் பெற்றவர்.

கோவை வேளாண் பல்கலை கழகத்தில் மண் அறிவியல் மற்றும் வேளாண் வேதியியல் துறையில் 98.2% மதிப்பெண்ணுடன் தங்க பதக்கத்துடன் முனைவர் பட்டமும் பெற்றவர். நம்மவரில் வேளாண் துறையில் முதல் முனைவர் பட்டம் பெற்ற பெருமைக்குரியவர்.

இவர் தனது துறையில் படிப்படியாக முன்னேறி பல்வேறு பதவிகளை வகித்தது மட்டுமல்லாமல் மிகச் சிறந்த சாதனைகளையும்

படைத்தவர். இதனால் இவர் இந்தியாவின் வடகிழக்கு மாநிலங்களில் அனைவராலும் நன்கு அறியப்பட்ட பேராசிரியராவார்.

இதுவரை இவர் 22 ஆராய்ச்சி கட்டுரைகளையும், 17 புத்தகங்களையும், 45 புத்தக அத்தியாயங்களையும் மற்றும் பல்வேறு செயல்முறை விளக்க நடைமுறை தொழில்நுட்ப கையேடுகளையும் எழுதி வெளியிட்ட பெருமைக்குடையவராவர்.





தனது மேம்பட்ட சாதனைகளுக்கான அங்கீகாரமாக இவர் தேசிய மற்றும் சர்வதேச அளவிலான 30க்கும் மேற்பட்ட விருதுகளை வாங்கி குவித்தவர். சிறந்த பேராசிரியர் விருது, சிறந்த ஆராய்ச்சியாளர் விருது, சிறந்த கல்வியாளர் விருது, சிறந்த மதிப்பாய்வாளர் விருது, டாக்டர் அப்துல் கலாம் விருது, சர்வதேச உன்னத கல்வியாளர் விருது, டாக்டர் ரத்தன் லால் விருது, சிறந்த வேளாண் விரிவாக்க கல்வியாளர் விருது போன்ற பல்வேறு சிறந்த விருதுகளை வாங்கி குவித்த பெருமைக்குரியவர்.

எண்ணிலடங்கா சாதனைகளை தனது துறையில் குவித்த இவர் தனது கல்லூரியான பாசிகாட்டில் முதல் வேளாண் வணிக மையத்தை உருவாக்கியதுடன் அதன் தலைமை நிர்வாக அதிகாரி மற்றும் முதன்மை ஆய்வாளராகவும் செயல்பட்டு வருகிறார்.


ஒட்டுமொத்தமாக இந்தியாவின் வடகிழக்கு மலை பகுதியில் விவசாயம் மற்றும் தோட்டக்கலை துறை மேம்பாட்டிற்காக நம்மவரான இவரது பாராட்டதக்க பங்களிப்பு, நமது அனைவருக்கும் பெருமை சேர்ப்பதாகும்.

**வேளாண் துறையில் முனைவர் பட்டம் பெற்று நமது சமூகத்திற்கு பெருமை சேர்த்துள்ள முனைவர் திரு. அ.சு. மயிலப்பா அவர்களை கல்வி வளர்ச்சிக் கழகம் பாராட்டுகிறது.**

**– கல்வி வளர்ச்சிக் கழக நிர்வாகிகள்.**



# திருமூலர் திருமந்திரம் பாடல் 724



உடம்பார் அழியில் உயிரார் அழிவர்
திறம்பட மெய்ஞ்ஞானம் சேரவும் மாட்டார்
உடம்பை வளர்க்கும் உபாயம் அறிந்தே
உடம்பை வளர்த்தே உயிர் வளர்த்தேனே

**வழிமந்திரம்**

உடலுக்குள் ஒன்றும் உயிரினைப் போற்றல்
அடல்விடை யானின் அருளே உடன் இன்றே
மெய்யினைக் காத்துநீ மெய்ப்பொருள் கண்டிடு
அய்யமின்றி உன்னுள் அறி :



**கோவை**
**கு.கணேசன்.**

**பொருள் :**

உடல் அழிந்துவிட்டால் உயிரும் உடலைவிட்டு நீங்கி விடும். பின் உயிருக்கு உற்ற துணையான மெய்ஞ்ஞானமாகிய பரம் பொருளைச் சேரும் முயற்சிகள் அற்றுவிடும். அதனால் உடம்பை பாதுகாக்கும் வழிகளை அறிந்து; உடம்பை காப்பாற்றி வளர்த்து; அதன் மூலம் உயிரையும் வளர்த்தேன் என்பது பொருள்.

**அச்சிட்டோர் : சூர்யா பிரிண்ட் சொலூசன்ஸ்**
534 -ஏ, காமராஜர் சாலை, சிவகாசி - 626123.
போன்:04562-223315 இ.மெயில் suryaprint1998@gmail.com

கதை, கட்டுரைகளில் வரும் பெயர்கள் யாவும் கற்பனையே. கதை, கட்டுரை, கவிதை முதலியவற்றைத் திருத்திஅமைக்கவும் கடிதங்களைச் சுருக்கவும் ஆசிரியர்க்கு உரிமை உண்டு. குரலில் வெளியிடப்பெறும் செய்திகளுக்கும் கருத்துகளுக்கும் அவற்றை எழுதியவர்களே பொறுப்பாவார்கள். பதில் சொல்ல கடமைப்பட்டவர்கள் ஆவார்கள் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறோம். - பதிப்பாசிரியர்


ஆதிகாலத்து
அலங்கார மாளிகை
1936
ஆதிகாலத்து
அலங்கார மாளிகை
பொன்னமராவதி | புதுக்கோட்டை
பட்டின் அற்புத படைப்புகள்
வர்ணதாரா
ஹம்சத்வனி


உ
வாழ்க வளமுடன்

Prop.
ALM. Natarajan

Estd : 2000
VSI

96795 57006
90959 06510

GSTIN : 35ABPPN2543RIZX



# வினாயகா ஸ்டீல் இண்டஸ்ட்ரீஸ்
# VINAYAGA STEEL INDUSTRIES

**MFG. OF ALL TYPE STEEL FURNITURE & FABRICATIONS**

**Plot No. R/56, Industrial Estate, Dolly Gunj, Port Blair - 744 103**

Prop.
ALM. Natarajan

Estd : 1994
VA

96795 57006
90959 06510



# வினாயகா ஏஜென்ஸி
# VINAYAGA AGENCY

Commercial Wet Grinders & Motors, Mixer Grinder,
Table Top Grinder, Mixie, Feather Cleaning Machine.



**3 & 4, MB No. 195, MG Road, Junglighat, Port Blair - 744 103.**

**Book Post - Printed Matter**

To

From

அ.வ.ந. கல்வி வளர்ச்சிக் கழகம்
3, முதல் குறுக்குத் தெரு,
அழகப்பா காம்ப்ளக்ஸ் பின்புறம்,
மெயின்ரோடு ரோடு, **பொன்னமராவதி,**
புதுக்கோட்டை மாவட்டம் - 622 407.

SURYA SVK Cell : 98421 24415